விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை (31.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## ஒருவர் மூன்று தடவைகள் ஜனாதிபதியாக இருக்கும்

# அரசியல் அமைப்பு திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிப்பு

## முன்னாள் ஜனாதிபதிக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதியாக ஒருவர் மூன்றாவது ஆட்சிக் காலத்துக்கும் தொடருவதற்கு வழி செய்யும் அரசியலமைப்புத் திருத்தத்துக்கான பிரேரணைக்கு அமைச்சரவை தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அந்தப் பிரேரணை இன்னும் சில நாட்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த திருத்தத்துக்கு தேவையான மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைக்குமா என்ற சந்தேகம் தற்போது நீங்கிவிட்ட நிலையில் ஒருவார காலத்தில் ஜனாதிபதியின் ஆட்சிக் காலங்களுக்கான கட்டுப்பாடு நீங்கும் என்று கூறப்படுகிறது.

இந்த திருத்தம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் 2016ஆம் ஆண்டு நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியும். 17 ஆவது சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கும் தற்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (18ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் நிலைப்பாடு இன்று வெளியிடப்படும்

(கொழும்பு)

இலங்கையின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் தமது நிலைப்பாட்டை இன்று வெளியிடப் போவதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான பிரதியொன்று நேற்றுமுன்தினம் இரவு தமக்குக்கு கிடைத்தாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்தார்.

அதில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீடிப்பது தொடர்பிலும் சுயாதீன ஆணைக் (18ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரவு அளிப்பது குறித்து இன்னும் தீர்மானமில்லை

### இடதுசாரி கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினால் முன்வைக்கப்படவுள்ள அரசியல் சாசனத்திருத் தங்களுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் இன்னமும் இறுதித்தீர்மானம் எடுக்கவில்லை என இடதுசாரி கட்சிகள் அறிவித்துள்ளன.

ஆளும் ஐக்கிய (18ஆம் பக்கம் பார்க்க)

## நிருபமா ராவ் இன்று யாழ். வருகை

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ் நேற்றிரவு இலங்கை வந்தார்.

நிருபமா ராவ் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்ததாகவும் இந்த விஜயத்தின் போது தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகரான நிருபமா ராவ் வடக்கு இடம்பெயர் மக்கள் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நிலைமைகள் குறித்துப் பார்வையிட உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (18ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னகருக்குள் நுழைந்த மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்

### கிளிநொச்சியில் நேற்று பதற்றம்

(கிளிநொச்சி)

பொன்னகர் மக்கள் குடியிருப்பதற்காக நேற்று மாலை தங்கள் காணிகளுக்கு நுழைந்த பொழுது அவர்கள் தடுக்கப்பட்டு வெளியில் அனுப்பப்பட்ட சம்பவம் பெரும் பதற்றத்தை உண்டாக்கியது.

கடந்த சில மாதங்களாக காணிகளுக்குச் செல்ல விடாமல் இந்த மக்கள் தடுக்கப்பட்டுள்ளனர். காணிகள் வடக்குமாகாணசபைக்கு சுவீகரிக்கப்படுகின்றன என்று கூறப்பட்டு தடுக்கப்பட்டுள்ள மக்கள் பொன்னகரிலும் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் தங்கியிருந்தனர்.

குறித்தமக்கள் இனியும் காத்திருக்க முடியாது என்றபடி நேற்று தமது காணிகளுக்குச் சென்று குடியேறப் போகிறோம் என காணிகளுக்கு நுழைந்தனர்.

காணிகளை துப்புரவு செய்துகொண்டிருந்தவேளை (18ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவ உயர்மட்டக் குழுவினர் இவ்வாரம் இலங்கைக்கு படையெடுப்பு

(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதி வி.கே.சிங் இவ்வாரம் வருகிறார். அதேபோல இராணுவத்தின் பல்வேறு மட்டத்திலான தளபதிகளும் இலங்கைக்குவரவுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை இலங்கையிலிருந்தும் இராணுவ தளபதிகள் இந்தியா செல்லவுள்ளனராம். இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர பாதுகாப்பு ஒத்துழைப்பு கடலோரப்பாதுகாப்பு போன்றவை தொடர்பாக இந்த பயணம் அமையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தளபதியைப் போலவே விமானப்படை தளபதி பி.வி.நாயக், பாதுகாப்புத் துறை செயலாளர் பிரதீப் குமார் ஆகியோரும் இலங்கைக்கு வரவுள்ளனர்.

கடந்த யூன் மாதம் இந்திய கடற்படைத் தளபதி நிர்மல் வர்மா கொழும்புக்குவந்து திரும்பினார்.

இதேவேளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இலங்கை (18ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண கல்விப் பணிப்பாளராக விக்னேஸ்வரன் நியமனம்!



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளராக வலிகாமம் கல்விப் பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் நாளை முதலாம் திகதி முதல் பதவியுயர்வு பெறுவதாக வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

எனினும் நியமனக் கடிதத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று மீண்டும் கடிதம் அனுப்பப்படுமென வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பதவிகளுக்கு அண்மையில் வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோரியிருந்தது. (18ஆம் பக்கம் பார்க்க)

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகைதந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

ஸ்ரீராம சாஸ்திரி
0775183681, 0775183109

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்துதரப்படும்.

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்**

**K.R.V.INN,**
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் முன்பாக)

(2283)

*கைரேகை பார்க்கும் நேரம்: காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்*


## கத்திக் குத்தில் இளைஞன் காயம்

(தொண்டைமானாறு)

மதுபோதையில் வந்த இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட கத்திக் குத்தில் ஒரு இளைஞன் படுகாயமடைந்துள்ளார். இச் சம்பவம் நேற்றிரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது,

வீதியால் சென்று கொண்டிருக்கையில் சைக்கிள் விபத்தில் சிக்கியதாகவும் அதனால் மோதல் நிலை தோன்றியதாகவும் அதன் பின்னர் இரு மணி நேரம் கழித்து மதுபோதையில் வீட்டுக்குள் நுழைந்தவர்கள் திடீரென அவரைக் கத்தியால் குத்தி விட்டுத் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் தொண்டைமானாறு சந்திக்கண்மையில் வசிக்கும் அருணன் ஜெயரூபன் (வயது-20) என்பவர் வயிற்றில் படுகாயமடைந்த நிலையில் மத்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸிடம் முறையிடப்பட்டுள்ளது. (ச-3)




# சிவகாளி ஜோதிடம

அன்பான யாழ்.குடி மக்களே!

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் பல சோதிடர்களை அணுகி இருந்த போதும் சரியான பலனை அறிய முடியாது உள்ளீர்களா?

இதோ இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்


**மஞ்சநாத சுவாமி**

உங்கள் ஜாதக பலன்கள், கைரேகை, நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வெளிநாட்டுப் பயணம், எதிரிகள் கண்திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள் ஆகியவற்றுக்குச் சரியான முறையில் தீர்வு பெற்றுத் தருவார்.

உடனே நாடுங்கள்:
வெலிங்டன் சந்தி அருகாமையில்
No. 382, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் வீதி)

(2285) கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை


## வேகக் கட்டுப்பாட்டையிழந்த மினிபஸ் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது



வேகமாக வந்த மினிபஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உல்லாசப் பயணிகள் பஸ்ஸுடன் மோதியதில் வயோதிப மாது ஒருவர் இரு விரல்களையிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் காரைநகர் பழைய கண்டி வீதியில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவகத்திலிருந்து சுமார் 7 இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் உல்லாசப் பயணிகள் காரைநகர் கசூரினா சென்றனர்.

செல்லும் வழியில் காரைநகர் பழைய கண்டி வீதியில் நிறுத்தி பொருள்கள் கொள்வனவில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது வேகமாக வந்த காரைநகர் சிற்றூர்தி பஸ்ஸுடன் மோதியது. மறுபக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லான்ட்மாஸ்டருடனும் மோதியது.

இவ் விபத்துச் சம்பவத்தில் காரைநகர் மினிபஸ்ஸில் பயணித்த மருதபுரத்தைச் சேர்ந்த செல்லையா இராசம்மா (வயது-67) என்பவர் கையில் இரு விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இவ் விபத்துச் சம்பவத்தினால் சுமார் ஒரு மணிநேரம் காரைநகர் மேற்கு வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-246)

## ஆங்கில மொழிமூல ஐசிரி பாட செயலமர்வு

ஆங்கில மொழி மூலம் ICT பாடத்தை பயிலும் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

ஆங்கில மொழி மூலம் ICT பாடத்தினை பயிலுகின்ற யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மாணவர்களையும் இச் செயலமர்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## மேர்வின் சில்வா மீதான விசாரணை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது

முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தொடர்பாக நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று மாலை கையளிக்கப்பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா களனி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி உத்தயோகத்தரை மரத்தில் கட்டியதை விசாரிப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவினால் ஒழுக்காற்றுக்குழு நியமிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா ஆகியோரிடமிருந்து பெற்ற அறிக்கை மூலமே இக் குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசேகரவைத் தலைவராகக் கொண்ட இக் குழுவில் ஓய்வு பெற்ற அரச அதிகாரி மகிந்த சமரசேகர மற்றும் சட்டத்தரணி எம்.என்.சஹீத் ஆகியோர் உறுப்பினர்களாவர். (ச-5)

## முதுகலைமாணி மீள்பரீட்சையினை நடத்தாததால் மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்பட்டு வந்த முதுகலைமாணித் திட்டமிடல், குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறிகளுக்கான பரீட்சைகள் நடத்தப்படாததால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பட்டமளிப்புக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்பட்டு வந்த முதுகலைமாணித் திட்டமிடல், குடித்தொகை மற்றும் அபிவிருத்திக் கற்கை நெறியானது முதலாம், இரண்டாம் பருவ கால பரீட்சைகள் 2009 ஆம் ஆண்டு நடத்தப்பட்டு பரீட்சை முடிபுகள் வெளியிடப்பட்டது.

தற்போது குறித்த கற்கை நெறியானது யாழ்.பல்கலைக்கழகத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களுக்கு மீள்பரீட்சை நடத்தப்படும் என கடந்த வருடம் முதல் கூறப்பட்டு வருகின்ற போதும் இதுவரை மீள்பரீட்சைக்கு உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தினால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

தற்போது பட்டமளிப்புக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ள போதும் பரீட்சை நடத்தப்படாமையால் பலர் பட்டமளிப்புக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையிலும் தமது பட்டப் படிப்பினைப் பூர்த்தி செய்யாத நிலையிலும் இருப்பதாகப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர். (ச)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்கும் பொருட்டு சிறுவர் நம்பிக்கை நிதியம் ஒன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந் நிதியத்தை ஸ்தாபிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக சிறுவர் மேம்பாட்டு மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இந் நிதியத்துக்கு முதற்கட்டமாக சேவ் த சில்றன் அமைப்பு 100 மில்லியன் ரூபாய் நிதியை வழங்கியுள்ளதாகத் தெரிவித்த அவர் வெகுவிரைவில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிதியத்துக்காக பல்வேறு அமைப்புக்களிடமிருந்து நிதியுதவிகளைப் பெறவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்த பிரதி அமைச்சர் இதற்காக திறைசேரியும் அனுமதி வழங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாயை கொடுப்பனவாக வழங்கத் திட்டமிட்டுள்ளதுடன் முதற்கட்டமாக 500 பள்ளி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ச-5)

## ஆஸி.செல்லும் அகதிகள் மீது பாரபட்சம் காட்டும் அரசு

இலங்கை உட்பட வெளிநாடுகளில் இருந்து அரசியல் தஞ்சம் கோரி வரும் அகதிகளை அவுஸ்திரேலியா ஒழுங்குமுறையாக நடத்துவது கிடையாது என்று ஐ.நாவின் இன ரீதியான பாரபட்சங்களுக்கு எதிரான குழு அறிவித்துள்ளது.

அகதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய வகையில் ஆஸியின் அரசமைப்பு இல்லை என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து கடல் வழியாக வரும் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கும் நடவடிக்கைகளை ஆஸி. இடைநிறுத்தி வைத்ததையும் இந்த அகதிகளைச் சிறையில் அடைத்து நடத்தும் முறையையும் இக் குழு கடுமையாக விமர்சித்துள்ளது. (ச-5)





# காணி விற்பனைக்கு

இணுவில் தியேட்டர் ஒழுங்கையில் கே.கே.எஸ் வீதிக்கு 50m தூரத்தில் சுற்றுமதில் கிணற்றுடன் கூடிய 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 3 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு :-
0778445323

(2281)

# இன்று ஒரு தகவல்

## எடுப்பதும் கொடுப்பதும்

லோகமான்ய பாலகங்காதர திலகர் என்று ஒருத்தர் இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் 'தபிபாய்'. மிகவும் பெரிய குடும்பத்துப் பெண் .நல்ல குணமுடையவர். அவர்களிருவரும் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்தக்காலத்தில் திருடர்களின் பயம் அதிகம்.

இந்தக்காலத்தில் மட்டும் என்ன? என்று கேட்கிறீர்களா? நீங்கள் கேட்பது நியாயம் தான்.

இருந்தாலும் இந்தக் காலத்துத் திருடனுக்கும் அந்தக் காலத்துத் திருடனுக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு.

அந்தக்காலத்துத் திருடன் நியாயம், அநியாயம் பார்ப்பதில்லை. எதுவாக இருந்தாலும் திருடிக் கொண்டு போய்விடுவான்.

இந்தக்காலத்திருடன் அப்படியில்லை அவனிடம் ஒரு தார்மீக உணர்வு உண்டாம்.

அப்பொழுதிருந்த வெள்ளைக்காரர்கள் எதைத் திருடினாலும் சரி அரிசியைத் திருடுவதில்லையாம்.

அப்படி ஒரு கொள்கை.

அதனால் அந்தக்காலத்துப் பெண்கள் நகை நட்டுகளை பத்திரமாக வைக்க வேண்டுமானால் பெட்டியில் வைப்பதில்லை. அரிசிப் பானையில் போட்டு வைத்துவிடுவார்கள். இப்பொழுதெல்லாம் வங்கிகளிலுள்ள சேப்டி லொக்கர்களில் பூட்டி வைத்துவிடுவார்கள்.

அந்தக்காலத்து சேப்டி லொக்கர் அரிசிப் பானை. வளையல் - மூக்குத்தி - தோடு - இப்படி எதுவாக இருந்தாலும் அதில் போட்டு பத்திரமாக வைத்துவிடுவார்கள். திருடன் தான் அரிசிப்பா னைப்பக்கம் போவதில்லையே!

திலகரின் மனைவியும் அதேபோல் தன்னுடைய நகைகளை ஒரு அரிசிப்பானைக்குள் போட்டு மூடி வைத்திருந்தார்.

இப்படியிருக்கும் போது, ஒருநாள் ஒரு பிச்சைக்காரப் பெண் வீடுவீடாக வந்து பிச்சைகேட்டுக் கொண்டு வந்தாள்.

திலகருடைய வீட்டுக்கும் வந்து, "தருமம் போடுங்கள் தாயே" என்றாள். இது திலகரின் மனைவியின் காதில் விழுந்தது. உடனே கைநிறைய அரிசியை அள்ளி கொண்டுவந்து போட்டார். பாத்திரத்தில் அரிசியை போட்ட பின்புதான் அது பளிச்சென்று கண்ணில் பட்டது. அதாவது அந்த அம்மாவின் வைரமூக்குத்தி ஒன்று அரிசியுடன் சேர்ந்து அந்தப் பிச்சைக் காரப் பெண்ணின் பாத்திரத்துக்கு போய்விட்டது. இது அந்த அம்மாவுக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது.

"மூக்குத்தி போய்விட்டதே... பிச்சைப் பாத்திரத்திற்குள் இருந்து அதை எப்படி எடுப்பது?" என்று யோசித்தார்.

வாய் திறந்து அதைக் கேட்பதற்கும் கூச்சம்.

இவ்வளவையும் திண்ணையில் உட்கார்ந்திருந்து திலகர் பார்த்துக்கொண்டிருந்தார்.

மனைவியின் மனதுக்குள் நடக்கும் மௌனப் போராட்டத்தை அவர் நன்றாகப் புரிந்து கொண்டார்.

மனைவியைப் பார்த்துச் சொன்னார்:

"தபிபாய், இது தெய்வ சம்மதம் அவளுக்குச் சேர வேண்டிய மூக்குத்தி அவளிடம் போய் விட்டது. பிச்சைப்பாத்திரத்தில் விழுந்த மூக்குத்தியை எடுக்கவேண்டாம்" என்றார்.

'சரி' என்று சொல்லி விட்டு மேற்கொண்டு எதுவும் பேசாமல் அந்த அம்மா வீட்டுக்குள் போய்விட்டாராம்.

இந்தக் காலத்திலெல்லாம் அப்படி நடக்குமா?

வெறும் அரிசியை போட்டுவிட்டு வியாக்கியானம் பேசிக் கொண்டிருக்க மாட்டோமா?

ஒரு பிச்சைக்காரன் பெரிய மனிதர் ஒருவரின் வீட்டுக்குப் போனான்.

"ஐயா, பிச்சைக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கிறோம். அதற்கு நிதி சேர்க்கிறோம். அதற்கு நூறு ரூபாய் கொடுத்தீர்களானால் அது எங்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும் என்றான்.

"அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது போ" என்றார் அவர்.

"அப்படியானால், 50 ரூபாயாவது கொடுங்கள்" என்றான் இவன்.

"அதுவும் முடியாது" என்று சொல்லிவிட்டார் அவர்.

"25 ரூபாய் ..." என்று இழுத்தான் இவன்.

"எதுவும் முடியாது "என்றார் அவர்.

"சரி, இவ்வளவு பெரிய வீட்டுக்கு வந்துவிட்டு வெறுங்கையுடன் திரும்புவது நன்றாக இருக்காது. அதனால் சும்மா ஒரு ரூபாய் மட்டுமாவது கொடுங்கள்" என்றான் அவன்.

"ஒரு பைசா கூட என்னிடம் கிடையாது" என்றார் அவர்.

''அப்படியானால் நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள்'' என்றான்.

என்ன செய்ய வேண்டும்? என்றார்.

''எங்களுடைய சங்கத்தில் நீங்களும் ஒரு உறுப்பினராக சேர்ந்து விடுங்கள்'' என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசாங்க பரீட்சைக்கான வினாத்தாள்களை அச்சிடுவதற்கு தனியாருக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

அரசாங்க பரீட்சைகளுக்கான வினாத் தாள்களை அச்சிடுவதற்கு இனி வரும் காலத்தில் தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள தனியார் நிறுவனங்கள் பரீட்சைகளுக்கான வினாத்தாள்களை அச்சிட்டு அதிக விலையில் விற்பனை செய்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனியார் துறையினர் வினாத் தாள்களை அச்சிடுவதால் சில சந்தர்ப்பங்களில் அதன் இரகசியத் தன்மை குறித்தும் சிக்கல் ஏற்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கமைய எதிர்காலத்தில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் அரசாங்க பரீட்சைக்கான வினாத்தாள்களை அச்சிடுவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாணவர்களுக்கு குறைந்த விலையில் வினாத்தாள்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு விற்பனை செய்யும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ- 9)

# யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்கு ரூ.2 இலட்சம் கடனாக வழங்கப்படவுள்ளன

வீடமைப்பு அதிகார சபை யாழ். மாவட்டத்தில் நிரந்தர வருமானம் பெறும் மக்களுக்கு சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற் காக ரூ.2 இலட்சம் கடனாக வழங்கவுள்ளது.

இக்கடனானது மீளச் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் சேதமடைந்த வீடுகளையுடையோர் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இக்கடனானது வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடிசை வீடுகளில் வசிக்கும் குடும்பங்க ளுக்கே வழங்கப்படவுள்ளதாகவும் சொந்தமாகக் காணி வைத்திருப்பவர்கள் இரு அரச உத்தியோகத்தர்களின் உத்தரவாதத்துடன் இக்கடன் வசதி வழங்கப்படவுள்ளது.

மேலும் இக்கடன் மீள 15 வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் இதற்காக 11 வீதம் வட்டி அறவிடப்படவுள்ளது.

இன்று காலை 11 மணிக்கு 20 பேருக்கு இக்கடன் திட்டத்தினை வீடமைப்பு நிர்மாணத்துறை மற்று ம் பொதுவசதிகள் துறை அமைச்சர் விமல் விரவன்ச வழங்கவுள்ளார்.

அத்துடன் இன்றைய தினம் காரைநகர் தோப்புக்காடு பகுதியிலுள்ள 14 வீடுகளுக்கான காணி உறுதிகளை காணியில் வசிப்போருக்கு வழங்கவுள்ளார்.

மேலும் நாவற்குழி சந்தியில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸவினால் 1981 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 298 வீடுகளில் இதுவரை வீட்டு உறுதி வழங்கப்படாத மக்களுக்கு அதற்கான உறுதிகளும் வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-7)

# இராசி பலன்

*31.08.2010*
*(ஆவணி 15, செவ்வாய்க்கிழமை)*
*சஷ்டி காலை 6.55 மணிவரை*
*பரணி முற்பகல் 9.48 மணிவரை*
*இராகுகாலம் 3.05-4.35 மணிவரை*
*சுபநேரம் 10.35-12.05 மணிவரை*
*நல்லூர் கந்தன் கார்த்திகை உற்சவம், கார்த்திகை.*

**மேடம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியம் ஒன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைப்பளு கூடும், மாலை நேரம் சுபசெய்தி வந்து சேரலாம்.

**இடபம்** குலதெய்வ வழிபாட்டில் அக்கறை செலுத்துவீர்கள், பிரியமான சிலருக்காக ஒரு தொகை பணத்தை செலவு செய்யும் சூழல் உருவாகலாம், பிரயாணத்தில் ஈடுபடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** தொழிலில் வருமானம் அதிகரிக்கும், வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும், பண வரவு எதிர்பார்த்தபடியே கிடைக்கும், பெருமையடையும் நாள்.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், நியாயமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும், பயணத்தில் பண வரவு ஏற்படலாம், பொறுப்புக்கள் தானே தேடி வரும்.

**சிங்கம்** சாமத்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வியாபார விருத்தியுண்டு.

**கன்னி** அம்பிகை வழிபாட்டால் பயன்பெற வேண்டிய நாள், இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பொதுநல ஈடுபாடுண்டு, மாலை நேரத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறலாம்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மாலை நேரத்தில் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், எதிரிகள் விலகுவர், நேற்று தடைப்பட்ட பணியை மீண்டும் தொடங்குவீர்கள், விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**தனுசு** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்திசாலித்தனமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்** பயணங்கள் பலனளிக்கும், வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், இனிமையான பொழுது போக்கை அனுபவிப்பீர்கள்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மீனம்** குடும்ப சுகம் உண்டு, விலையுயர்ந்த பொருட்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள், பொதுவாழ்வில் பாராட்டு, புகழும் அதிகரிக்கும் நாள்.

வளவன்

# மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)


சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
| --- | --- | --- | --- |
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 80 |
| தக்காளி | 50 | 90 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 70 | 60 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 100 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 60-70 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 20 | 50 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 100 |
| போஞ்சி | 120 | 150 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 |







தேசிய கல்வி நிறுவக ஆதரவுடன் காலநிலை மாற்றம் தொடர்பான இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை அண்மையில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், கல்வி அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் திருமதி டிலானி அமரசிங்க, தேசிய கல்வி நிறுவக உதவி பணிப்பாளர் நாயகம் கலாநிதி திருமதி ஜெயந்தி குணசேகர ஆகியோர் வரவேற்கப்படுவதையும் கல்வி அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் காலநிலை தொடர்பாக விளக்கமளிப்பதையும் அருகில் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் அகமட் ஹுசைன் மொழி பெயர்ப்புச் செய்வதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 17ஆம் நாளான இன்று கார்த்திகை திருவிழாவை முன்னிட்டு மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை திருமதி விமலாதேவி நாகேஸ்வரன் (பாட்டு), திருமதி சைந்தவி நிஷாகரன் (வயலின்), என். மாதவன் (மிருதங்கம்), எஸ்.செந்தூரன் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் வயலின் கச்சேரி இடம்பெறவுள்ளது.

✠✠✠

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ளன.

இதில் "ஈழத்தில் முருக வழிபாடு" என்னும் விடயம் பற்றி யுகன்ஸ்ரீந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து மல்லாகம் நீர்வேலி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை மற்றும் கட்டுவன் சிவலோகபதி ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இட பெறவுள்ளன.

✠✠✠

நல்லைக் கந்தன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையினால் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்றுவரும் "வில்லிபாரதம்" என்னும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு "பகாசூரன் வதம்" என்னும் பொருளில் பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-9)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தையொட்டி நடைபெற்றுவரும் சிறப்புச் சொற்பொழிவுகளில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.15 மணிமுதல் 7.15 மணிவரை மெச்சத்தரும் பொருள் என்றும் தலைப்பில் வவுனியா மாவட்ட தமிழ்ச்சங்கத் தலைவரும் வவு.தமிழ். மத்திய மகா வித்தியாலய ஆசிரியருமான தமிழருவி த.சிவகுமாரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-9)

## எழுத்துப் பரீட்சைக்கான திகதியில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திர எழுத்துப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் இடம்பெறமாட்டாதெனவும் அவ்வெழுத்துப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி சனிக்கிழமை ஏற்கனவே வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் நடைபெறுமென யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (2)

## உதைபந்தாட்ட லீக் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட லீக் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.

இதில் மற்றுமொரு போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் அணி மோதவுள்ளது. (ஸ்ரீ -4,3,24)

## உரமானியத்திற்கு பதிவு செய்தல்

(துனங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார அமைப்பிற்குட்பட்ட விசாயிகளுக்கான உரமானியப் படிவங்கள் நாளை புதன்கிழமை தொடக்கம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மூன்று தினங்களுக்கு கிராமசேவகர் அலுவலகத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

மேற்படி படிவங்களை மறவன்புலோ விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் என கமக்கார குழுவின் செயலாளர் க.குகானந்தன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-7,37)

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

(கல்வயல்)

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்கத்தில் 2010 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக பி.சின்னத்துரை, செயலாளராக அ.மயூரன், பொருளாளராக ப.பரமானந்தம் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக வி.பொன்னம்பலம், சு. குகநாதன், ச.விபுலன், அ.கேசவலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-31)

## குழந்தையின் சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சங்கானை ஏழாம் கட்டையைச் சேர்ந்த நடராசா யோகேஸ்வரி என்பவருடைய 5நாள் வயதுடைய ஆண்குழந்தையின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இக்குழந்தையின் சடலத்தை இதுவரை எவரும் உரிமை கோராது இருப்பதால் உரித்துடையோர் மூன்று தினங்களுக்குள் பொறுப்பேற்கும்படி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ-2)

## யாழ்.இளைஞர்,யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கடன்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான சுயதொழில் கடன் வசதியைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக யாழ் மாவட்டத்தில் வசிக்கின்ற 18 வயது முதல் 30 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு ஆகக்கூடுதலாக இரண்டரை இலட்சம் ரூபாவை கடனாக வழங்கவுள்ளது.

இக்கடனைப் பெறுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் தங்களது பெயர், நிரந்தர முகவரி, பிறந்த திகதி , அடையாள அட்டை இலக்கம், திருமணமானவரா, நிஸ்கோ அங்கத்தவரா அங்கத்தவராயின் அதன் இல, செய்ய இருக்கும் சிறு தொழில், தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை தயாரித்து கடித உறையின் இடது பக்க மூலையில் ''சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சுயதொழில் கடன்'' என குறிப்பிட்டு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ப.பஞ்சலிங்கம், பொதுமுகாமையாளர்(நிஸ்கோ),தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கட்டடம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிஸ்கோ பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)




## வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமாறு கோரிக்கை

(நல்லூர்)


வலி-கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வளலாய் பகுதியில் உலக வங்கி வேலைத்திட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்படவிருந்த வீட்டுத் திட்டம் நிறுத்தப்படும் நிலையில் உள்ளது. இதற்கான காரணம் வீடு கட்டுவதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்காமையேயாகும்.

கடந்த 30 வருடகால யுத்தத்தில் முற்று முழுதாக சேதமடைந்த கிராமமே இக்கிராமமாகும்.

தற்போது இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்த இவர்களுக்கு வழங்கப்பட்ட இவ் வீட்டுத் திட்டம் இடைநிறுத்தப்படும் நிலையில் இருப்பதால் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து இவ் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆவன செய்யும்படி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-134)

## கொஞ்சேஞ்சி மாதாவின் திருச்சுருவ கண்ணாடி அடித்து நொறுக்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)


மாட்டீனார் குருமடத்திற்கு முன்னால் அமைந்துள்ள "கொஞ்சேஞ்சி" மாதாவின் புனித சிலைக்கு முன்னுள்ள உண்டியலும் திருச்சுருவ கண்ணாடியும் திட்டமிடப்பட்டு தீய சக்திக ளால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மாட்டீனார் குருமடத்திற்கு முன்னால் அமைந்துள்ள கொஞ்சேஞ்சி மாதாவின் சிலை மரியன்னை பேராலயத்தை முதன்மைப்படுத்தும் நோக்கில் ஆலய வளவுக்குள் நெடுங்காலமாக அமைந்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் மாதாவின் திருச்சுருவ முன்பக்க கண்ணாடி கற்களால் சேதமாக்கப் பட்டுள்ளதுடன் மறைக்கல்வி வளவுக்குள் அமைக்கப்பட்டுள்ள உண்டியலும் உடைக் கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் இப்புனித பேராலயத்தின் மகிமையை பேணிப்பாதுகாப்பதுடன் இவ்வாறான செயலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)



நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அம்மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக தையல் இயந்திரங்கள், சைக்கிள்கள், 25 சோலர் விளக்குகள் ஆகியவற்றை நேற்று நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் லிங்கநாதனிடம் ஒப்படைப்பதையும் அருகில் உள்ளூராட்சி செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# டெங்கு ஒழிப்பு ஊர்வலம்

(அல்வாய்)

டெங்குஒழிப்பு எழுச்சி செயற்பாட்டு நிகழ்வொன்று நேற்றுக் காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகி முழுநாள் செயற்பாடாக நடைபெற்றது.

இவ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை பருத்தித்துயைில் இருந்து மந்திகை ஆதார வைத்தியசாலை வரை மேற்கொள்ளப்பட்டதுடன் இதில் சுகாதாரப் பரிசோதகர்கள், கல்விச் சமூகம் , வர்த்தக சமூகம், குடும்ப நல உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு திணைக்களத்தினர், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இணைந்து பங்குபற்றினர்.

அத்துடன் இதுவரை யாழ்.மாவட்டத்தில் 2ஆயிரத்து 500 பொதுமக்களுக்கு டெங்கு நோய் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் தினமும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பத்திற்கு மேற்பட்ட நோயாளர்கள் அனுமதிக்கப்படுவதாகவும் இதுவரை யாழ்.மாவட்டத்தில் 21பேர், டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் டெங்கு பெருகும் விதத்தில் வீடுகளையோ, வியாபார நிலையங்களையோ, பாடசாலைகளையோ வைத்திருக்கும் இடங்களில் சுகாதார பரிசோதகர்களினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் மேற்படி குற்றத்திற்காக 25ஆயிரம்ரூபாய் குற்றப்பணம் செலுத்தவேண்டும்அல்லது மூன்று மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டி ஏற்படும் எனவும் எனவே இப்பகுதி மக்கள் இணைந்து டெங்கை ஒழிக்க நடவடிக்கை எடுப்போம் எனக் கோசமிட்டவாறு இவ் ஊர்வலத்தை மேற்கொண்டனர். (ஸ்ரீ-7-19)

## ஒரு மாதத்துக்கு மேலாக நிவாரணம் வழங்காததால் மீள்குடியேறியோர் சிரமம்

கிளிநொச்சி அறிவியல் நகரில் மீளக் குடியேற்றப்பட்ட மக்களுக்கு கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லைஎனத்தெரிவிக்கப்படுகிறது.

செட்டிகுளம் முகாமில் வசித்த போது உலர் உணவு வழங்கப்பட்ட போதிலும் 30.07.2010 இல் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குக் கொண்டுவரப்பட்டு மறுநாள் வீடுகளுக்கு அனுப்பபட்டு அங்கு உலர் உணவு வழங்குவதற்கான முத்திரைகள் தரப்பட்டும் இன்றுவரை நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என அம் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வேலை வாய்ப்புகள் எதுவிமில்லாத சூழலில் கஷ்டப்படுவதாகவும் இவ்வாறான வாழ்வு நடாத்தும் இடப்பெயர்வாளர்களை பாராளுமன்ற உறுப்பினர்களோ அரச அதிகாரிகளோ தமது குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என கூறுகின்றனர்.

மேலும் தறப்பாள் கொட்டகைகளில் வாழ்வதாகவும் வெப்பத்தினால் குழந்தைகள் பகல் வேளைகளில் மர நிழல்களில் நேரத்தை களிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். இடம் பெயர்ந்தவர்களான எமது குறைகள் எப்போது? யாரால் நீக்கப்படும் எனக் தெரியாது உதவ யார் வருவார் என எதிர்பார்த்திருக்கின்றனர். (ஸ்ரீ-2-22)

## பயனாளிகளுக்கான முட்கம்பி விநியோகம்

(பூநகரி)

உணவு விவசாய அமைப்பினால் (FAO) பூநகரியில் இருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்து மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள மட்டுவில் நாடு மேற்கு பிரிவினைச் சேர்ந்த 15 பயனாளிகளுக்கு தலா இரண்டு முட்கம்பிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பயனாளிகள் அப்பகுதி கிராம சேவையாளரினூடாக தெரிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## தொலைத்தொடர்பு கோபுரம் செயற்பட தொடங்கியுள்ளது

(நவாலி)

நவாலியில் 4 மாதங்களுக்கு முன்பு டயலொக் நிறுவனத்தினால் நிறுவப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சேவைக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இச் சேவையினால் நவாலி, ஆனைக்கோட்டை பகுதியில் நிலவிய தொலைத்தொடர்பு பிரச்சினை நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4-26)

## திருட்டுக்கு முன் பிரார்த்தனையில் ஈடுபட்ட திருடர்கள்

களுத்துறை மாவட்டத்தின் பதுரெலியாவில் வர்த்தகர் ஒருவரின் வீடொன்றுக் குள் புகுந்து 2 இலட்சம் ரூபாய் பெறுமதி யான நகைகள், ஒரு இலட்சம் ரூபா பணம் என்பவற்றை திருடிய இரு இளைஞர்கள் அத் திருட்டுக்கு முன்னர் அளுத்கமையிலுள்ள ஆலயமொன்றுக்குச் சென்று பிரார்த்தனைகளில் ஈடுபட்டனராம்.

தாம் மேற்கொள்ளப்போகும் கொள்ளையில் தமக்குப் பாதுகாப்பளிக்குமாறு அவர்கள் வேண்டினராம்.

17 ,18 வயதான இந்த இளைஞர்கள் 28 நாட்களின் பின் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)





ரூ.5000/- போன்ற சிறுதொகையில்
இப்போது உங்களுக்குமொரு நடைமுறைக்கணக்கு

யூனியன் வங்கியின் ATM அட்டையும் இலவசம்

உங்கள் வாழ்க்கைக்கு மேலும் மேலும் வசதி செய்தவண்ணம் யூனியன் வங்கி இப்போது உங்களுக்கென தனிப்பட்ட நடைமுறைக்கணக்கொன்றை அறிமுகம் செய்கிறது.

யூனியன் வங்கியின் Easy Plus நடைமுறைக்கணக்குக் காசோலைப் புத்தகம் இருக்கும்போது உங்கள் பணக்கொடுப்பனவு விடயங்களை மிக இலகுவாகச் செய்துகொள்ள முடிவதோடு, செலவுகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தவும் முடியும். யூனியன் வங்கியின் Easy Plus நடைமுறைக்கணக்கு உங்களது அன்றாடப் பணக்கொடுக்கல் முகாமைத்துவத்துக்கோர் அரிய வழி.

UNION BANK

15A, அலெக்ஸ் ப்ளேஸ், கொழும்பு-03. தொலைபேசி : 011 2370870 www.unionb.com

(C-979)



சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல் -2010

**சாவகச்சேரி பிரதேச சபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் M-09,M-08 ) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை " செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கேள்விகள் பரிசீலிக்கப்படும் போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. கேள்விப் படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி :- 08.09.2010 பி.ப. 2.00 மணிவரை
   கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 15.09.2010 பி.ப. 12.00 மணிவரை
   கேள்விகள் திறக்கப்படும் திகதி :- அன்றைய தினம் (15.09.2010)
   பி.ப 1.00 மணியளவில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
6. மேலதிக விபரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT +NBT 12%+3% ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கொயிலாமனை கொல்களம் அமைத்தல் | 15,000.00 | 1500.00 | 225.00 |
| 02 | வேம்பிராய் மயானத்திற்கு எல்லைச்சுவர் அமைத்தல் | 5,000.00 | 1000.00 | 150.00 |

சாவகச்சேரி பிரதேச சபை,
தலைமை அலுவலகம், கொடிகாமம் ,
30.08.2010

திரு.வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம்,
செயலாளர் ,
சாவகச்சேரி பிரதேசசபை.

(C-981)

# நயினாதீவுக்கு அலைமோதும் மக்கள் வெள்ளம்


திரண்டிருக்கும் மக்கள் கூட்டம்

"தம்பி அம்பாளுக்கு 12 மணிக்கு பூஜை, கட்டாயம் இன்றைக்கு என்ர நேர்த்திக்கடனை நிறைவேற்ற வேணும் போக அனுமதியப்பன்"

இது நயினாதீவுக்கு சென்ற வயதான பக்தை ஒருவர் கடற்படைவீரர் ஒருவரிடம் விடுத்த வேண்டுகோள்.

தென்னிலங்கையிலிருந்து நயினாதீவுக்குச் செல்வோரின் தொகை தற்போது அதிகரித்துள்ளது. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவ காலத்தில் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை போன்று தினமும் பெருமளவான தென்பகுதி மக்கள் நயினாதீவுக்கு பயணத்தை மேற்கொள்கின்றனர்.

நாகவிகாரைக்குச் செல்லும் அவர்கள் தமது வழிபாட்டினை முடித்துக் கொண்டு பின்னர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தமது வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து நயினாதீவுக்குச் செல்வதென்பது முன்னர் பாதுகாப்பு அனுமதி பெற்று சிங்கள மகாவித்தியாலயத் வந்த ஒழுங்கின் அடிப்படையில் குறிகட்டு வானுக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

இவ்வாறு ஒருநாளைக்கு பல்லாயிரக் கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. இவ்வாறான நடைமுறை இருப்பது சிறந்த பயணத்தை மேற்கொள்வதற்கு வழிவகுக்கும். எனினும் அம்பாளைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்களுக்கு பெரும் இடையூறாக உள்ளது.

சைவ ஆலயங்களில்குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பூசைகள் இடம் பெறுவது வழக்கம். இவ்வாறு இருக்கும்போது நாகவிகாரைக்குச் செல்லும் பக்தர்களையும் நயினாதீவுக்கு அம்பாளைத் தரிசிக்கச் செல்பவர்களையும் ஒரே நடைமுறையில் பயணத்தை மேற்கொள்ள அனுமதிப்பது சிறந்ததாக அமையவில்லை.

இவ்வாறான நடைமுறையின் மூலம் நயினாதீவு நாகபூசணி அம்மனைத் தரிசிக்கச் செல்வோர் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதுடன் கள், சுற்றுலாப் பயணிகளின் பயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு கடற்படையினரே கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சைவசமய பூஜை வழிபாடுகள் தெரிவதில்லை என்பதுடன் தமிழ் பேசுவதற்கும் முடிவதில்லை.

இதனால் சிங்களம் தெரியாத தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை அவர்களுக்கு புரியப்படுத்த முடிவதில்லை.

இந்த நிலையில் சகலருக்கும் ஒரே நடைமுறையே பின்பற்றப்படுகின்றது. இது குறித்து எந்த ஒரு அரச அதிகாரியும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை என்றும் ஏனெனில் அவர்கள் பயணம் செய்யும் போது இலகு

வாகனப் பதிவுகள் தொடக்கம் பயண ஒழுங்கு கட்டுப்பாடுகள் வரை அனைத்துச் செயற்பாடுகளையும் கடற்படையினரே மேற்கொள்கின்றனர். எந்தவொரு அதிகாரிகளோ சிவில் பணிப்பாளர்களோ அங்கு கடமையில் இல்லை.

வாகன வரிப்பணம் பெறுவதற்கு மட்டுமே சிலர் அங்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களும் தமது கடமைகளை நினைத்தபாட்டில் மேற்கொள்வதாக வாகனச் சாரதி ஒருவர் கூறினார்.

சிலரிடம் மட்டுமே வரிப்பணம் பெறப்படுவதாகவும் வரிப்பணம் செலுத்தினாலும் சிலவேளைகளில் பற்றுச்சீட்டு வழங்கப்படுவதில்லை


நயினாதீவு இறங்குதுறையில்

எனவும் குறைகூறினர்.

**மக்களின் வேண்டுகோள்**

நயினாதீவுக்கு சகல மக்களும் சென்று வருவது பெருமைகொள்ளத் தக்க விடயம் .அவர்களின் வரவு வரவேற்கத்தக்கது. அதேபோன்று நயினை நாகபூஷணி அம்மன் கோயிலுக்குச் செல்வோருக்கு விசேட பயண ஏற்பாடுகளை செய்ய அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும். பௌத்த விகாரையில் எந்தநேரத்திலும் வழிபாடுகளில் ஈடுபடலாம் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் நயினை நாகபூஷணி அம்மன் கோயிலில் குறிப்பிட்ட நேரத் திலேயே பூசை வழிபாடுகள் இடம் பெறுகின்றன. எனவே பயண ஏற் பாட்டுக்கான வழிமுறைகளை சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டும்.

## பயண ஒழுங்கில் அசமந்தம் அம்பாளின் பக்தர்கள் திண்டாட்டம்

துக்குச் சென்று பஸ்களில் பயணிப்பதைப் போன்றதாகும்.

வாடகைக்கு வாகனங்களை அமர்த்தி நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நேர்த்திக்கடன்களை முடிக்கச் செல்லும் பக்தர்களின் பரிதாப நிலையைப் போக்குவதற்கு எந்தவொரு அரச அதிகாரியும் முன்வரவில்லை என்பதே பெரும் கவலை


காத்திருக்கும் வாகனங்கள்

யாக உள்ளது. நயினாதீவுக்கு வாடகை, சொந்த வாகனங்களில் செல்வோர் குறிகட்டுவான் பிரதேசத்துக்கு அண்மையில் மறிக்கப்படுகின்றனர்.

அங்கு வாகனங்கள் நிறுத்தப்பட்டு தமது நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் திரும்ப வேண்டியும் உள்ளது.

இதேபோன்றே படகில் ஏறிப் பயணம் செய்வதற்கு சகல மக்களும் அலைபோல் குறிகட்டுவான் இறங்கு துறையில் திரண்டிருக்க எவ்வாறு பயணத்தை மேற்கொண்டு நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்குச் செல்ல முடியும் எனவும் பக்தர்கள் கேள்வி எழுப்பினர்.

**தமிழ் தெரிந்த அதிகாரிகள் கடமையில் இல்லை**

நயினாதீவுக்குச் செல்லும் பக்தர் வாக பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதே அதற்குக் காரணம் என்றும் மக்கள் பேசிக் கொண்டனர்.

**மிரட்டப்படும் படகோட்டிகள்**

நயினாதீவுக்கான சேவையில் பெருமளவான படகுகள் ஈடுபடுத்தப்படுகின்றன.

தமது இச் சேவையை கஷ்டத்துடனேயே மேற்கொண்டு வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

" கடற்படையினரின் அறிவுறுத்தலின் படியே பயணத்தை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடின் அவர்களிடம் அடிதான் வாங்கவேண்டும்" என படகோட்டி ஒருவர் கூறினார்.

இந்தநிலையில் கடற்படையின் சொற்படியே தாம் பயணத்தை மேற்கொள்ள முடியும் எனவும் அவர்கள் கூறினர்.

**அதிகாரிகளின் அசமந்தப்போக்கு**


நயினாதீவுக்கான பயண ஒழுங்குகளை மேற்கொள்வதில் கடற்படையினர் காட்டும் அக்கறை போன்று அரச அதிகாரிகள் எவரும் செயற்படுவதில்லை என மக்கள் குறைகூறுகின்றனர்.

**தீபன்**

வாகன ஒழுங்குகளையும், வாகனத் தரிப்பிடங்களையும் பெருமளவு செலவு செய்து அமைத்துக் கொடுத்த பின்னர் அப்பகுதியில் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்து விட்டதாக சில அதிகாரிகள் எண்ணுகின்றனர்.

பயண ஒழுங்குகளிலும் சிக்கல் நிலை இருப்பதைப் புரிந்து கொண்டு அதனை சீர் செய்வதற்கும் அவ் அதிகாரிகள் முன்வரவேண்டும். இதுவே மக்களின் கோரிக்கையாகும்.



யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர் தினம் நேற்று திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன்,பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் போர் உத்திகளை அறிய இந்திய - பாகிஸ்தான் இராணுவம் ஆர்வம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக இலங்கை இராணுவம் கையாண்ட தந்திரோபாயங்கள் குறித்து ஆராய்வதற்கு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இராணுவங்கள் தீர்மானித்துள்ளன.

இதற்காக இரண்டு நாடுகளினதும் இராணுவக் குழுக்கள் எதிர்காலத்தில் இலங்கை வரவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல கூறினார்.

இதன்போது,தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக இலங்கை இராணுவம் புவியியல் அமைப்புகளைப் பயன்படுத்திய விதம் தொடர்பாக இந்திய, பாகிஸ்தான் இராணுவம் கவனம் செலுத் துவார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியையும் அவர்கள் பார்வையிடவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே சிறந்த அரசியலாக கருதப்பட வேண்டும்

## சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே சிறந்த அரசியலாகக் கருதப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்புக்களை சிதறடிக்கச் செய்யும் அரசியல்வாதிகளினால் நீண்ட காலத்திற்கு அரசியல் நடத்த முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மிரிஸ்வத்த பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அபிலாஷைகளை அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளாமை துரதிர்ஷ்டவசமானதென சுட்டிக் காட்டியுள்ள அவர்,

ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகளும் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-4)

# நிருபமா ராவ்- கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு செயலாளர் நிருபமா ராவ் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சித் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனை நாளை சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பு திருகோணமலையிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளதாக முதலமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண அபிவிருத்தி, மீள் குடியேறிய மக்களின் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய நிலவரம் என்பன குறித்து இருவரும் பேசவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வடபகுதி மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யும் இரண்டாம் கட்ட அமர்வு

## கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழு நடத்தவுள்ளது

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக் குழு, வடபகுதி மக்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்யும் இரண்டாம் கட்ட அமர்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிணங்க கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிகிறது.

அடுத்தமாதம் 17,18,19 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளதாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மக்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்யும் முதற்கட்ட அமர்வு வவுனியா மாவட்டத்தில் நடைபெற்றபோது 40 க்கும் மேற்பட்டவர்கள் சாட்சியமளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்திற்கான சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை அடுத்தமாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதெனக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது எட்டு அமர்வுகள் நடத்தப்பட்டு 15பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.எம். சமரகோன் கூறினார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை வெற்றியளிக்காமை உள்ளிட்ட 5 விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2008 ஆம் ஆண்டில் இந்த ஆணைக் குழுவை நியமித்தார்.

ஆணைக்குழுவின் பகிரங்கச் சாட்சி விசாரணை இம்மாதம் 11 ஆம்திகதி ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)


# இலங்கை வங்கி

**உங்களதும் உங்கள் தாய்நாட்டினதும் எதிர்கால முன்னேற்றத்துக்காக முகாமைத்துவப் பயிலுநராக எம்முடன் இணையுங்கள்.**

சமாதானமும், சுபீட்சமும் நிறைந்த எதிர்காலத்தை நோக்கிய பணியில் ஈடுபட்டுள்ள இலங்கையின் இம் முன்னோக்கிய பயணத்துக்கு உதவுவதற்காக இலங்கையின் முதற்தர வங்கியான இலங்கை வங்கி நிதமும் உறுதியாக அர்ப்பணிப்புடன் உள்ளது. எனவே மேலும் எங்களது ஆற்றல்களை விருத்தி செய்து எங்களது மக்களுக்கு மிகவும் சிறந்த வங்கிச் சேவைகளையும், வசதிகளையும் வழங்குவதில் வழிதேடுகின்ற நாம், எங்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவக்கூடிய ஆர்வமுள்ள இளம் நபர்களை அழைக்கின்றோம்.

வங்கித்துறையினூடாக தமது தொழிலில் முன்னேறுவதற்கு நாட்டம் கொண்ட தகைமையுடைய ஆர்வமுள்ள சுறுசுறுப்பான இளம் நபர்களிடமிருந்து முகாமைத்துவ பயிலுநர் தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவையான தகைமைகள்**

**கல்வி/தொழிற்துறைத் தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பிரதானமாக, வங்கியியல், நிதியியல், முகாமைத்துவம், வணிகநிர்வாகம், வர்த்தகம், பொருளாதாரம், சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம், கணிதம், புள்ளிவிபரவியல், தகவல் தொழில் நுட்பம் / கணனியியல், பௌதிக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், பொறியியல், கட்டடநிர்மாணக்கலை, சட்டம், விவசாயம் அல்லது தொடர்புடைய ஏனைய துறையில் வகுப்புடன் பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

  அல்லது
- மேற்குறித்த துறைகளில் பட்டமொன்றைக் கொண்டிருப்பதோடு, தொடர்புடைய துறையில், பட்டப்பின்படிப்பு தகைமைகளைக் கொண்டிருத்தல்

  அல்லது
- மேற்குறித்த துறைகளில் பட்டமொன்றைக் கொண்டிருப்பதோடு, இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில AIB/DBF தகைமையை அல்லது அதற்குச் சமமான U.K. தகைமையைக் கொண்டிருத்தல்.

  அல்லது
- சட்டத்தரணி

  அல்லது
- CIMA/ICA/ACCA/CFA உறுப்புரிமை

**ஏனைய தகுதிகள்**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்
- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், சிறந்த தொடர்பாடல் மற்றும் நபர்களுக்கிடையே தொடர்பு கொள்ளும் ஆற்றலுடன் குழுவாக இணைந்து பணியாற்றத்தக்க தலைமைத்துவப்பண்புகளைக் கொண்டிருத்தல்
- கணனி அறிவு விசேட தகுதியாகக் கருதப்படும்

**வயது**

- விண்ணப்ப முடிவுத்திகதியன்று 30 வயதுக்குற்பட்டவராக இருத்தல்

**ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்**

- தெரிவுசெய்த விண்ணப்பதாரர் இரண்டு வருட பயிற்சியின் பின்பு தகுந்ததெனக் கருதின் நிரந்தர நிறைவேற்று உத்தியோகத்தர் தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவர்
- பயிற்சிக் காலத்தில் மாதாந்த கொடுப்பனவாக ரூ.25,000/= வழங்கப்படுவதுடன், நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டால் கவர்ச்சிகரமான சம்பள பொதியுடன் ஏனைய அனுகூலங்களும் வழங்கப்படும்
- நாட்டின் எந்தவொரு பாகத்திலும் பணியாற்ற ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

**தெரிவு நடைமுறை**

- பொது அறிவு, பகுப்பாய்வுத் திறமைகள், ஆங்கில மொழி ஆகியவற்றில் எழுத்துப் பரீட்சையின் பின்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய விண்ணப்பம் தயாரித்து அத்துடன், பிறப்பு, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளையும் இணைத்து (மூலப்பிரதிகள் அல்ல) கீழ்குறிக்கப்படும் முகவரிக்கு 2010 செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், **"Management Trainee"** எனக் குறித்திருக்க வேண்டும்

பிரதான முகாமையாளர், (வளங்கள் மற்றும் தொழில்சார் அபிவிருத்தி)
இலங்கை வங்கி
26 ஆம் மாடி, தலைமைக்காரியாலயக் கட்டிடம்
இல. 04, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எவ்வகையிலேனும் ஆதரவுகோருவோர் தகைமையை இழப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்குண்டு

பார்க்க - www.boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

**SPECIMEN APPLICATION FORM**

*Preferred Medium for Examination : Sinhala -2 Tamil -3 English - 4*
*Enter Relevant No.*

1. Surname with initials : (in English Block Capital) (Eg. SILVA, A.B.) :
2. Name indicated by initials (in English Block Capital) :
3. Sex : Male - 0, Female-1 : Enter Relevant Number
4. Address (Permanent : (in English Block Capitals)
5. District and District No. : (in English Block Capitals)

| | | | | |
|---|---|---|---|---|
| Colombo - 01 | Gampaha - 02 | Kalutara - 03 | Matale - 04 | Kandy - 05 |
| Nuwara Eliya - 06 | Galle - 07 | Matara - 08 | Hambantota - 09 | Jaffna - 10 |
| Mannar - 11 | Mullaitivu - 12 | Vavuniya - 13 | Trincomalee - 14 | Batticaloa - 15 |
| Ampara - 16 | Puttalam - 17 | Kurunegala - 18 | Anuradhapura - 19 | Polonnaruwa - 20 |
| Badulla - 21 | Monaragala - 22 | Kegalle - 23 | Ratnapura - 24 | Killinochchi - 25 |

6. Contact No - Residence :
   Mobile :
7. Date of Birth - (Date /Month/ Year):
8. National Identity Card No.:
9. Civil Status : Married - 1, Single - 2 Enter Relevant Number :

10. Educational/Professional Qualifications

| Degree/Diploma/Other | Name of institution | Results |
|---|---|---|
| | | |

11. Extra Curricular Activites

12. Record of Employment, if any

| From | To | Institution | Designation |
|---|---|---|---|
| | | | |

13. Non - related Referees :


| | (i) | (ii) |
|---|---|---|
| Name | | |
| Address | | |
| Contact No. | | |
| Office | | |
| Residence | | |

I certify that the information given in this application is true and correct.

Date Signature

(C-980)

# நன்றாகப் படிக்கக்கூடிய அமைப்பு யாருக்கு ?



மேடராசியில் பிறந்தவர்களுக்கு பூமிகாரகன் அங்காரகன் மேடராசியை பார்வையிட்டால் அந்த ஜாதகர் , செழிப்புள்ள பூமிக்கு அதிபதியாகவும் , பலர் பாராட்டும்படியும் விளங்குவார்.

மேடராசியில் பிறந்த ஜாதகருக்கு , சந்திரன் புதனால் பார்க்கப்பட்டால் நன்கு படித்தவராகவும் , பாராட்டுப் பெறக் கூடியவராகவும் விளங்குவார்.

குருபகவான் பார்வையிட்டால் நல்ல பரந்த பூமியைப் பெறுவார்.

சுக்ரனால் பார்க்கப்பட்டால் அரசியல் பிரமுகராக விளங்குவர். சனி பகவானால் பார்க்கப்பட்டால் மற்றவர் பொருளைக் கவரக் கூடியவராக விளங்குவார்.

சூரிய பகவானால் பார்க்கப்பட்டால் அதிக விரயத்தைச் செய்யக் கூடியவராக இருப்பார்.

**கிரகங்களும் , தேசங்களும்**

சூரிய பகவானுக்கு பழைய தேசங்களில் கலிங்க தேசமும் ,சனிக்கு சவுராஷ்டிராவும் , செவ்வாய்க்கு அவந்தியும் , குருபகவானுக்கு சிந்து தேசமும் ,புதன் பகவானுக்கு மகத தேசமும், சந்திர பகவானுக்கு யவன தேசமும் , கேதுவுக்கு மலை சார்ந்த பிரதேசங்களும் , சுக்ரனுக்கு கீகட தேசமும்(கீகட தேசம் என அழைக்கப்படுபவை அங்க, வங்கதேசங்களாகும்) சொல்லப்பட்டுள்ளன.

**நவக்கிரகங்களும் , இரத்தினங்களும்**

சூரியனுக்கு மாணிக்கமும் , சந்திர னுக்கு முத்தும் , செவ்வாய் பகவானு க்கு பவளமும் , புதன் பகவானுக்கு அடர்ந்த பச்சையும் , குருவுக்கு புஸ்பராகமும், சுக்ரனுக்கு வஜ்ரமும் , சனிக்கு நீலமும் , ராகுவுக்கு கோமேதகமும்,கேதுவுக்கு வைடூரியமும் இரத்தினகளாக சொல்லப்பட்டுள்ளது.

**கிரக தானியங்கள்**

சூரிய பகவானுக்கு கோதுமையும் , சந்திர பகவானுக்கு அரிசியும், சனிக்கு எள்ளும் , குருவுக்கு கடலையும் , கேதுவுக்கு கொள்ளும் , செவ்வாய்க்கு துவரையும் , புதனுக்கு பயறும் , சுக்ரனுக்கு மொச்சையும் , இராகுவுக்கு உளுந்தும் சொல்லப்பட்டுள்ளது.

**கிரகங்களுக்குரிய நைவேத்தியங்கள்**

சூரிய பகவானுக்கு சர்க்கரைப் பொங்கலும், சந்திரனுக்கு நெய் கலந்த பாயசமும் , அங்காரகனுக்கு துவரை அல்லது அவிசும் , புதனுக்கு பால் அன்னமும் , குருவுக்கு தயிர் சாதமும், சுக்ரனுக்கு நெய் அன்னமும் , சனிக்கு எள்ளு சாதமும்,இராகுவுக்கு உளுந்து சாதமும், கேதுவுக்கு பலவகையான சித்ரான்னங்களும் சொல்லப்பட்டுள்ளன.

**கிரகங்களின் வர்ணங்கள்**

சூரியன் சிவப்பு வர்ணத்திற்கும், சந்திர பகவான் வெள்ளைக்கும், அங்காரகன் சிவப்பிற்கும், புதன் பச்சைக்கும், குரு மஞ்சளுக்கும் , சுக்ரன் வெள்ளைக்கும், சனி கறுப்பு வர்ணத்திற்கும் , இராகு நீல வர்ணத்திற்கும், கேது பலவித வர்ணத்திற்கும் அதிபதியாக சொல்லப்பட்டுள்ளது.

**கிரகங்களின் அதிதேவதை**

சூரியனுக்கு அக்னியும் , சந்திரனுக்கு வருணதேவதையும் , அங்காரகனுக்கு பூதேவியும் , புதனுக்கு விஷ்ணு பகவானும், குருவுக்கு இந்திரனும்,சுக்ரனுக்கு இந்திராணியும் , சனிக்கு ப்ரஜாபதியும் , இராகுவுக்கு சர்ப்பமும்,கேதுவுக்கு பிரம்மாவும் அதிதேவதைகளாக சொல்லப்பட்டுள்ளன.

**கிரகங்களின் பிரத்யதி தேவதை**

சூரியனுக்கு ருத்ரனையும் , சந்திரனுக்கு கௌரிதேவதையையும் , செவ்வாய்க்கு ஷேத்திர பாலகர்களையும்,புதனுக்கு விஷ்ணு பகவானையும் , குருபகவானுக்கு பிரம்மாவையும் , சுக்ரனுக்கு இந்திரனையும் ,சனிக்கு எமனையும், இராகுவுக்கு நிருதியையும், கேதுவுக்கு சித்ரகுப்தனையும் பிரத்யதி தேவதையாக சொல்லப்பட்டுள்ளது.

## பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட மற்றொரு நபர் மர்மமான முறையில் மரணம்

(கொழும்பு)

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு சந்தேக நபர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராகம பொலிஸ் நிலையத்திலிருந்து கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ராகம பொலிஸார் குறித்த சந்தேக நபரை ஒப்படைக்கும் போது எவ்வித காயங்களும் இருக்கவில்லை எனவும் உயிரிழந்த நபர் தாக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னரும் மர்மமான முறையில் சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.பின்னர் அந்த உயிரிழப்பு மாரடைப்பால் ஏற்பட்டதென தெரிவிக்கப்பட்டது.

பெலியத்த பிரதேசத்தைச் சேர்ந்த ரொசான் ஜயசேகர என்ற நபரே இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசி ஒன்றை களவாடிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபரின் உடலில் பல இடங்களில் காயங்கள் காணப்பட்டதாக மரண விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## மூன்று வேளை உணவினை உட்கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பவர்கள் அதிஷ்டசாலிகள்

### கரு ஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் மூன்று வேளை உணவினை உட்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைப்பவர்கள் அதிஷ்டசாலிகள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சியை கைப்பற்றுவதில் அரசாங்கம் கூடிய அக்கறை காட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ,அப்பாவி பொதுமக்கள் எதிர் நோக்கிவரும் பிரச்சினைகள் குறித்து , அரசாங்கம் அதிக கரிசனை காட்டுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பெப்லியாவ பகுதி விஹாரை ஒன்றில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்வடைந்துள்ளதாகவும் , மந்த போசாக்கு மற்றும் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை தோற்கடித்த இராணுவத் தளபதி இன்று சிறையில் வாடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நலன்களை அரசாங்கம் கருத்திற்கொள்வதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## நலன்புரி முகாம்களில் புதுக்குடியிருப்பு மக்களே பெருமளவில் தங்கியுள்ளனர்

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களே அதிகளவில் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களில் 20ஆயிரம் பேர் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என வன்னிப் பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் மொத்தமாக 32 ஆயிரத்து 898 பேர் தங்கியிருப்பதாகவும், இவர்களில் பலர் தற்காலிகமாக முகாம்களை விட்டு வெளியேறுவதற்கான அனுமதிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியானதன் பின்னர் துரித கதியில் எஞ்சியுள்ள நலன்புரி நிலைய மக்களும் மீள்குடியேற்றப்பட உள்ளனர். (ஸ்ரீ-2)

## அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாது புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இதனால் இப்பதவிக் காலத்தை நீடிப்பதை நாம் எதிர்க்கின்றோம். பதவிக் கால நீடிப்பு ஜனநாயகத்திற்கு சாவு மணியாகும் என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எம்.பி. வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பது முஸ்லிம் காங்கிரஸின் அரசுக்கான ஆதரவு வழங்குவது தொடர்பாக கேட்ட போதே ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான வாசுதேவ நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முஸ்லிம் மக்களின் உடைமைகளையும் தேவைகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை எடுத்திருக்கலாம். இதன் மூலம் அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு மேலான பலம் பாராளுமன்றத்தில் கிடைத்துள்ளது.

அதேவேளை எதிர்க்கட்சி பலவீனமடைந்துள்ளது. இது ஜனநாயகத்தை பாதிக்கும். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டுமென்பதே எமது கொள்கையாகும்.

அதைவிடுத்து இதன் பதவிக் காலத்தை அதிகரிப்பதை நாம் எதிர்க்கின்றோம். இதற்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் குரல் கொடுப்போம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனான உறவு பாதிக் காத வகையில் இதனை முன்னெடுப்போம்.



தற்போதைய அரசியலமைப்பில் திருத் தங்களை மேற்கொள்ளாது புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். இதன் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இல்லாவிட்டால் தமிழ் மக்களுக்கு எதுவிதமான நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை.

தெற்காசியாவில் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பாக அந்நாடு அதிக கவனம் செலுத்துகிறது.

எனவே தான் இந்தியாவின் பிரசன்னம் எமது நாட்டுக்குள் அதிகரித்திருக்கின்றது. அதைவிடுத்து அவர்கள் தமிழ் மக்கள் பிரச்சினையில் கரிசன கொண்டுள்ளதாக கூற முடியாது என்கிறார். (ஸ்ரீ-2)

# தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும்

## ஸ்ரீரங்கா எம்.பி. வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் காணப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீரங்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வளங்கள் வெளிநாடுகளின் கைகளில் சென்று சேர்வதனை தடுக்க வேண்டுமாயின், தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல நாடுகள் நல்லெண்ண அடிப்படையில் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்வதாகக் காட்டிக் கொண்ட போதிலும், அநேக நாடுகள் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதனை விரும்பவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணாத காரணத்தினாலேயே அம்பாந்தோட்டை துறைமுகப் பணிகளை சீனாவிற்கும் காங்கேசன்துறை துறைமுகப் பணிகளை இந்தியாவிற்கும் ஒப்படைக்க நேரிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தவணைக்காலத்தை நீடிப்பது சிறுபான்மை மக்களின் முக்கிய பிரச்சினையாக அமையவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அல்லது பிரதமரை தெரிவதில் சிறுபான்மை மக்களுக்கு உரிய பங்களிப்பு கிடைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, ஜனாதிபதி அல்லது பிரதமரை தெரிவு செய்யும் போது சிறுபான்மை மக்களுக்கு போதியளவு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சிகள் பிளவடைந்து சென்றால், எதிர்க்கட்சியின் பலம் குறைவடைந்து விடும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அடையாளம் காணப்படாத 8 புற்றுநோய்கள் கண்டுபிடிப்பு

மனிதனைப் பாதிப்புக்குள்ளாக்கும் இனம் காணமுடியாத மேலும் 8 விதமான புற்றுநோய்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளதாக லண்ட னைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லண்டனைச் சேர்ந்த கீலி பல்கலைக் கழகத்தின் புற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள் மொத்தம் 25 வகையான ஆராய்ச்சியினை மேற்கொண்டனர். இவற்றில் இனம் காணப்படாத எட்டு வகையான பற்றுநோய்கள் மனிதனைத் தாக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய புற்றுநோய்கள் அறிகுறி உள்ள 50 வயதிற்குட்பட்டவர்களுக்கு இதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

எனவே 55 வயது முதல் 60 வயதினை கடந்த ஆண், பெண்கள் தங்கள் இரத்தம் மற்றும் சிறுநீர் ஆகியவற்றினை பரிசோதித்துக்கொள்ள வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## பல்கலைக்கழக பேராசிரியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் பாரியளவு போராட்ட்ங்களை முன்னெடுக்க நேரிடும் என பல்கலைக்கழக பேராசிரியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் கடமையாற்றி வரும் பல்கலைக் கழக பேராசிரியர்களும் இணைந்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

முதல் கட்டமாக இன்றைய தினம் ஒரு மணித்தியாலம் எதிர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட உள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்டமாக தன்னார்வ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் இடை நிறுத்தப்படும் எனவும் இந்தத் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் செவிசாய்க்கத்தவறினால், பாரியளவு தொழிற் சங்கப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த தொழிற்சங்கம் என்ற ரீதியில் முடிந்தளவு பிரச்சினைகளுக்கு சுமுகமான் முறையில் தீர்வுகாண முயற்சிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 15 பல்கலைக்கழகங்களில் சுமார் 40 ஆயிரம் விரிவுரையாளர்கள் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இதயத்துடிப்பளக்கும் முப்பரிமாணக் கருவி

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தி யசாலையில் முதன்முறையாக இதயத் துடிப்பை அளக்கும் முப்பரிமாண உபகரண ங்கள் இரண்டு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.


இந்த வகையான உபகரணங்கள் நாட்டின் சுகாதாரத்துறையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இனங்காணப்படாத நோய்கள் காரணமாக பல உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கு இதய சம்பந்தமான பிரச்சினைகளே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நாளாந்தம் 290 பேர் இனம்காணப்படாத நோய்கள் காரணமாக உயிரிழப்பதாக வைத்தியசாலை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இதய சிகிச்சைப் பிரிவு இந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதன்மூலம் நோயாளர்களுக்கான சேவைகளின் தரத்தை உயர்த்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# 31.08.2010




- 1422 - ஆறாம் ஹென்றி 9 மாத அகவையில் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.
- 1864 -அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் ஜோர்ஜியாவின் அட்லாண்டா நகர் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1886 -தென் கரோலினாவில் சார்ல்ஸ்டன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1888 - கிழிப்பர் ஜேக்கின் முதலாவது படுகொலை இடம்பெற்றது.
- 1897 - தோமஸ் எடிசன் முதலாவது திரைப்படம் காட்டும் கருவியான கினெட்டஸ்கோப்புக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1919 - அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.
- 1920- போலந்தில் கமரோவ் என்ற இடத்தில் சோவியத் போல்ஷெவிக்குகளுடன் இடம்பெற்ற போரில் போலந்து வெற்றி பெற்றது.
- 1942 - மேற்கு உக்ரைன், டெர்னோப்பில் என்ற இடத்தில் காலை 4.30 மணிக்கு 5,000 யூதர்கள் பெல்செக் என்ற நாசி வதைமுகாமிற்கு அனுப்பப்பட்டனர்.
- 1945 -அவுஸ்திரேலியாவில் லிபரல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1957 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.
- 1962 -ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.
- 1978 - இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.
- 1986- கலிபோர்னியாவில் இரு விமானங்கள் வானில் மோதிக் கொண்டதில் 67 பேர் வானிலும் 15 பேர் தரையிலும் கொல்லப் பட்டனர்.
- 1986 - சோவியத் பயணிகள் கப்பல் "அட்மிரல் நகிமொவ்" கருங்கடலில் மூழ்கியதில் 423 பேர் கொல்லப்பட்டனர்.
- 1991 - சோவியத் ஒன்றியத்திலிருந்து கிர்கிஸ்தான் வெளியேறி தனிநாடாக அறிவித்தது.
- 1994 - ஐரியக் குடியரசு இராணுவம் போர்நிறுத்தத்தை அறிவித்தது.
- 1998 - வடகொரியா தனது முதலாவது செய்மதியை ஏவியது.
- 1999 -புவெனஸ் ஐரிசில் பயணிகள் விமானம் ஒன்று விமான நிலையத்தில் இருந்து புறப்படுகையில் விபத்துக்குள்ளாகியதில் 65 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - பக்தாத்தில் அல் ஆயிம்மா பாலத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 1,199 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை நடிகர் சரத்குமார் ஆரம்பித்தார்.

## பிறப்புகள்

- 1569 - ஜஹாங்கீர், இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னன் (இ. 1627)
- 1870 - மரியா மாண்ட்டிசோரி, இத்தாலியைச் சேர்ந்த கல்வியாளர் (இ.1952)
- 1944 - கிளைவ் லொயிட், மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாளர்
- 1979 - யுவன் சங்கர்ராஜா, தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்.

## இறப்புகள்

- 1814 - ஆர்தர் பிலிப், பிரித்தானிய கடற்படை அட்மிரல், காலனித்துவ நிர்வாகி (பி. 1738)
- 1963 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (பி. 1882)
- 1997 - டயானா, வேல்ஸ் இளவரசி (பி. 1961)

## சிறப்பு நாள்

- மலேசியா - சுதந்திர தினம் (1957)
- திரினிடாட் டொபாகோ - சுதந்திர தினம் (1962)
- கிர்கிஸ்தான் - சுதந்திர தினம் (1991)

**1997 - வேல்ஸ் இளவரசி டயானா பாரிஸில் கார் விபத்தில் கொல்லப்பட்டார்.**



# ஈழத்தவர் வரலாறு

21

## 4. சிங்கை நகர் அரசு

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)


வடவிலங்கை இராச்சியத்தை யாழ்ப்பாணம் அரசு என அழைத்தமை, 15 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரேயாகும். 1435 இல் திருமாணிக்குழி என்னும்இடத்தில் பொறிக்கப்பட்ட விஜய நகரப் கல்வெட்டிலே முதன் முதலாக யாழ்ப்பாணயன் பட்டினம் என்ற பெயர் வடவிலங்கை இராட்சியத்திற்கும், ஈழம் என்ற பெயர் தென்னிலங்கை இராச்சியத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளன. 15 ஆம்நூற்றாண்டுச் சிங்கள நூல்கள் ஆரியச் சர்க்கரவர்த்திகளின் அரசிருக்கையை 'யாபா படுன' என்று குறிப்பிடுகின்றன.

எவ்வாறாயினும், வடவிலங்கை இராட்சியத்தில் பல்வேறு குறுநில மன்னர்கள் ஆங்காங்கு ஆட்சி செலுத்தி வந்துள்ளனர். எனத் துணியலாம். ஆரியர்கள் வட இந்தியாவில் நிலைகொண்டபோது, திராவிடர்கள் ஆரியர்களால் நெருக்கப்பட்டு இந்தியாவின் தென்பாகத்திற்கும், இலங்கைக்கும் குடிபெயர்ந்தார்கள்.

அவ்வாறு இடம்பெயர்ந்த திராவிடர்களின் குடியேற்றம், நாகதீவில் மிகக் கூடுதலாக நிகழ்ந்திருத்தல் வேண்டும் தென்னிலங்கையில் சிங்களக்குடியேற்றம் நிலை கொள்ளத் தொடங்கிய வேளை, வடவிலங்கையில் திரவிடக்குடியேற்றம் வளர்வதாயிற்று சேர். போல்.பீரீஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி, விஜயன் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வடவிலங்கையில் குடியிருப்புகள் விருத்தியுற்றிருந்தன என்பதாகும். இந்தியாவிலிருந்து ஆக முப்பது மைல் கடலே வடவிலங்கையைப்பிரிக்கிறது.

அதனை இலகுவில் கலங்களில் தாண்டி வடவிலங்கை குடியிருப்புகள் உருவாகின




பிராமிய எழுத்துக்களின் தமிழ் வடிவம்

இலங்கையின் பல பாகத்தில், ஆதித் திராவிட மக்கள் சடலங்களைப் பெருந்தாழிகளிலிட்டு அடக்கம் செய்த முது மக்கள் தாழிகள் அகன்றெடுக்கப்பட்டுள்ளன. 1955 ஆம் ஆண்டு புத்தளம் – மறிச்சுக்கட்டி வீதியில் முது மக்கள் தாழி ஒன்றும், 1982 இல் ஆனைக்கோட்டையிலும், 1984 இல் குஞ்சு பரந்தனிலும் இத்தகு முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இவை விஜயனின் வருகைக்கு முன்னரே திராவிட நாகரிகம் இங்கு நிலைபெற்றிருந்ததைக் காட்டி நிற்கின்றன.

கி.மு 2 ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணப் பகுதியில் மக்கள் குடியேற்றம் இருந்தது என்பதை தொல்பொருட் சான்றுகள் திட்டவட்டமாக நிறுவுகின்றன. கந்தரோடைப்பிரதேசத்திலே குடியேறியிருந்த மக்கள் பண்பாட்டு முன்னேற்றம் அடைந்தவர்களாக, கி.மு நூற்றாண்டுகளிலிருந்து பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டு, எழுத்தின் உபயோகத்தையும் அறிந்து வாழ்ந்தனர் என இதே சான்றுகளைக் கொண்டு அறியலாம் இவ்வாறே யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளிலும் முன்னேற்றமடைந்த மக்கள் வாழ்ந்திருக்கவேண்டும்.

**4.2 முதலாவது சிங்களப் படையெடுப்பு**

வடவிலங்கையில் நாகர்களதும் அவர்களோடு கலந்து திராவிடர்களினதும் குடியிருப்புக்கள் வளர்வது, தென்னிலங்கைச் சிங்கள ஆட்சியாளருக்கு தலையிடியைக் கொடுத்திருக்க வேண்டும்.

இந்தியாவுடனான சகல தொடர்புகளும் வடவிலங்கைத் துறைமுகங்களுடாகவே (மாதோட்டம், ஜம்புக்கோளம்) நடந்து வந்தன.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

எனவே வட இந்திய ஆரியருக்கும் தென்னிலங்கை சிங்களவருக்குமிடையே திராவிடக் குடியேற்றகள் அமைவது களையப்பட வேண்டியதாகப்பட்டிருக்கும்.

(தொடரும்)

# சங்க - மன்யோசு அகப்பாடல்களில் கூற்றுநிலை-ஓர் ஒப்பீடு

04

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

**சங்க – மன்யோசுப்பாடல்களில் கூற்று நிலை**

சங்கப்பாடலிலும் மன்யோசுப்பாடலிலும் இடம்பெறும் அகமாந்தர்களான தலைவன் தலைவியின் கூற்றுக்கள் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன. இரு மொழிப்பாடல்களிலுமுள்ள கூற்றுக்களை அதை ஆற்றுபவர் கேட்போர், இயற்கைச் சூழல் பின்னணி, உணர்வு நிலை வெளிப்பாடு என்ற அடிப்படையில் ஒப்பிட்டு ஆராயலாம்.

அ) தலைவன் கூற்று :

தழங்குரல் முரசம் காலை இயம்ப
கடுஞ்சின வேந்தன் தொழில் எதிர்ந்
தனனே
மெல்அவல் மருங்கின் முல்லை பூப்பப்
பொங்குபெயல் கனைதுளி கார்எதிர்ந் தன்றே
அம்சில் ஓதியை உள்ளுதொறும்
(ஐங்குறு நூறு448)

Faru gasumi — வேனிலின் புகார்
Tanafiku tawi ni — தவழும் வயலிலே
Ifo tukite — குடிலும் செய்தே
Aki ta karu made — கார்வயல் களையும் வரை
Omofasimu raku — காதலியை நினை யும்.
(மன்யோசு 2250)

வேந்தனின் போர்வினை தணிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் தம் பிரிவுத்துயர் கெட, தலைவியைக் கண்டு மகிழ வேண்டும் என்ற ஆர்வமும் பாசறைக்கண் இருக்கும் ஐங்குறுநூற்றுத் தலைவனின் கூற்றில் காணப்படுகின்றது.

கார் காலத்தில் மீள்வதாகக் கூறிய தன் கூற்றை நம்பித் தெளிந்த தலை வியை, ஏமாற்ற உணர்வு எதிர்கொள்ளும் என்ற துயர் தலைவனை வாட்டுகின்றது. காரும் போரும் முன்னிற்கும் போது பாசறையிலிருந்து தலைவியை நினைந்து புலம்புகின்றது தலைவனின் காதல் மனம். முல்லை மலர்கள் மலர்ந்து கார் வரவைப் பறைசாற்றுகின்றன. கார் கண்டதும் தலை வனின் போர் ஈடுபாடு மறைகின்றது.

மலர்ந்திருக்கும் முல்லை மலர்கள் தலைவியின் அழகிய கூந்தலை நினைவூட்டுகின்றன. தலைவியின் நினைவால் துயரும் தூக்கமின்மையும் எதிர்கொள்கின்றன. வேந்தனின் செய்தியும் கார்வரவின் செய்தியும் தன் செய்தியும் கூறி ஆற்றாது புலம்புபவனாக தலைவன் காட்டப்படுகின்றான். கார் மழைப் பொழிவும், முல்லை மலர்களும் பின்னணியாக்கப்பட்டுள்ளன.

கார்கால வயலின் கதிரறுப்பு நிறைவடைந்து தலைவியை விரைவில் காணவேண்டும் என்ற ஆர்வம் மன்யோசுத் தலைவனின் கூற்றில் காணப்படுகின்றது. கார் காலத்தில் வயலின்கண் குடில் செய்து தங்கியிருக்கும் தலைவனுக்குப் பருவ வரவு தலைவியை நினைவுபடுத்துகின்றது. கதிரறுப்பு நிறைவடைந்த பின்புதான் அவளை இணைய முடியும். அதுவரை தலைவியை நிணைந்தபடி ஆற்றாது புலம்புபவனாக மன்யோசுத் தலைவன் அமைகின்றான். கார்ப்பருவமும் வயல் நிலமும் அவனது மன உணர்வைப் புலப்படுத்துவதற்குப் பின்னணியாக்கப்பட்டுள்ளன.

ஆ) தலைவி கூற்று :

அம்ம வாழி தோழி அவிழிணர்க்
கருங்கால் மராஅத்து வைகுசினை வான்பூ
அருஞ்சுரஞ் செல்லுநர் ஒழிந்தோர் உள்ள
இனிய கமழும் வெற்பின்
இன்னா தென்ப அவர் சென்றவாறே
(ஐங்குறுநூறு 331)

Sakura fana — சகுர மலரின்
Toki va sugi nedo — காலமேகழியாது
Miru firo no — காணும்மாந்தரின்
Kofi no sakari to — விருப்பின் அலர்வுமே
Ima si tiru ramu — இப்போ சிதறிடும்.
(மன்யோசு 1855)

பிரிந்து சென்றவன் குறித்துச் சென்ற பருவத்தில் திரும்பி வராமையால் ஏங்கித் துயருறும் பெண்மையை ஐங்குறுநூற்றுப் பாடல் காட்டுகின்றது. மராஅம் எனப்படும் வெண்கடப்ப மலர்கள் வேனிற் காலத்தில் மலர்பவை. வெண்கடப்ப மலர்கள் வேனிற் காலத்தை நினைவுபடுத்துகின்றன. அதே நேரம் தலைவன் சென்ற இடர் மிகுந்த வழிகளும் அவளுள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. தன்னுடைய மனத்துன்பங்களைத் தோழிக்குக் கூறி ஆறுதல் தேட முயல்கின்றாள். வேனிற் காலத்தில் மலரும் வெண்கடப்ப மலர்கள் தலைவியின் மன உணர்வுகளைப் புலப்படுத்துவதற்குப் பின்னணியாக்கப்பட்டுள்ளன.

வினைவயிற் பிரிந்து சென்ற தலைவனை நினைத்துத் துன்புறும் தலைவியின் கூற்றாக மன்யோசுப்பாடல் அமைகின்றது. சகுர மலர்கள் வேனிற் காலத்தில் மலர்பவை. மலர்கள் மலர்ந்திருப்பதைக் காணச் செல்லுதல் ஜப்பானியருடைய மரபான நடைமுறை. ஆனால் அவனோ குறித்துச் சென்ற வேனிற் பருவத்தில் திரும்பி வரவில்லை. தன் மன உணர்வுகளைப் பரிமாறிக்கொள்வதற்கு உறவுகள் அருகில் இன்மையில் தனிமைத் துன்பத்தில் புலம்புகின்றாள். சகுர மலர்களின் மலர்ச்சி தலைவியின் உணர்வுகளுக்குப் பின்னணியாக்கப்பட்டுள்ளன.

சங்க அகப் பாடல்களும் ஜப்பானிய மன்யோசு காதற் பாடல்களும் பொருள் மரபின் அடிப்படையில் பெரிதும் ஒற்றுமையுடையன. தொல்காப்பியம் கூறிய பொருட் கூறுகளில் குறைந்தளவு ஒற்றையேனும் மன்யோசுப் பாடல்கள் கொண்டு அகப்பொருள் இலக்கண அமைப்பிலுள் அடங்குகின்றன. காதல் வாழ்வில் ஏற்படும் உணர்வு நிலைகளில் புலப்பாடுகள் பல்வேறு நிகழ்வுகளால் சங்கப் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். சங்க அகப் பாடல்களில் காணப்படும் அக நிகழ்ச்சிகளை ஒத்த பாடல்கள் மன்யோசுவில் காணப்படுகின்றன. மன்யோசுப் பாடல்களுக்கு கூற்று நிலை வழங்கப்படவில்லை.

தொல்காப்பியத்தை அடிப்படையா கக் கொண்டு மன்யோசுப் பாடல்களுக்கு கூற்று நிலை வகுக்கப்படும் இடத்து எதிர் காலத்தில் மன்யோசுப் பாடல்களுக்கும் தமிழ் அகப்பொருள் மரபினையொட்டி திணை , துறை வகுப்பது எளிதாக இருக்கும்.

சங்க அகப் பாடல்களில் புலவனின் புலமைத்துவத்துக்கு எடுத்துக் காட்டாக அமைபவை கூற்று நிலைப் பாடல்கள். இவை மரபு நிலையில் அகப் பாடலை வரையறை செய்தன. சங்கப் புலவர்கள் வேறுபட்ட வாழ்வியற் சூழலில் அகப்பாடல்களை பாடியமையால் கூற்று நிலையாக வேறுபாடுகள் ஏற்பட்டன. யாருடைய கூற்று எனத் தீர்மானிப்பதற்கு வரையறைகளைச் செய்து அவற்றின் அடிப்படையில் பாடல்களை அணுகும் போது கூற்று நிலை பற்றிய தெளிவு இனங் காணப்படும். பழைய ஜப்பானிய காதற் பாடலான மன்யோசுவிற்கும் இத்தகைய வரையறை பொருந்தும்.

செல்வி. செல்வ அம்பிகை நடராஜா
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(முற்றும்)

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 500 பேர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் 500 பேர் விரைவில் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களே உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க குறிப்பிட்டார்.

இவர்களில் 17 தாய்மார்களும், இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும், உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களும் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 4ஆம் திகதி மாலை வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் கலாசார நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

இதன்போது பயிற்சிகளை நிறைவு செய்த முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் 180 பேருக்கான சான்றிதகள் வழங்கப்படவுள்ளதாகவும் 500 பேர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அரச இலவச மருந்தை மோசடி செய்வோருக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நோயாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் மருந்து வகைகளைத் தனியார் மருத்துவர்களுக்கு சட்ட விரோதமான முறையில் வழங்குபவர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்கக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவிருக்கின்றது.

இம் மருந்து வகைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் தனிநபர்களுக்கும் இத் தண்டனையை விதிக்கக்கூடிய வகையில் சட்டம் திருத்தப்படும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (2)

# வாக்காளர் பதிவேட்டுத் திருத்தம் குறித்து 600 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

## கபே அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்காளர் பதிவேட்டுத் திருத்தம் தொடர்பாக 600 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

பதிவேட்டுத் திருத்தத்திற்கான ஆவணங்கள் உரிய முறையில் விநியோகிக்கப்படாமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கபே அமைப்பின் ஊடாக இணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்திலும் , கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வாக்காளர் பதிவேட்டுத் திருத்தம் உரியமுறை யில் மேற்கொள்ளப்படவில்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளிலுள்ள அநேகமான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில், வாக்காளர்களின் விபரங்களைத் திரட்டுவதற்கான படிவங்கள் உரியமுறையில் விநியோகிக்கப்படவில்லையென கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

கிராம உத்தியோகத்தர்களூடாக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையை மேற்பார்வை செய்யத் தவறியமை இதற்கான காரணமெனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவேட்டுத் திருத்தம் தொடர்பாக இதுவரை 160 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் அநேகமான இடங்களில் வாக்காளர்களின் விபரங்களைத் திரட்டுவதற்கான படிவங்கள் விநியோகிக்கப்படவில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பாளர்களின் இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து தேர்தல்கள் செயலகத்திடம் கேட்டபோது, வாக்காளர் பதிவேட்டுத் திருத்தத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் கிடைக்காதவர்கள் அது குறித்துத் தேர்தல்கள் செயலகத்தில் முறைப்பாடு செய்ய முடியுமெனப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தால் இது தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கடந்த வருடம் மாத்திரம் 5651 பேர் மாயம்! காணாமல் போதல்களில் இலங்கை சாதனை

(கொழும்பு)


அரசியல் காரணங்களின் பின்னணியில் கடந்த வருடம் மாத்திரம் இலங்கையில் 5 ஆயிரத்து 651 பேர் வரை காணாமல் போயுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

காணாமல் போதல் அதிகம் இடம் பெற்றிருக்கும் உலக நாடுகள் வரிசையில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

அக்காலப் பகுதியில் ஈராக்கில் 16 ஆயிரத்து 409 பேர் வரை காணாமல் போயிருந்தனர் என்றும் எனவே காணாமல் போதல் மிக அதிகமாக இடம்பெற்றிருக்கும் நாடு ஈராக் தான் என்றும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

ஆர்ஜன்டீனாவில் 3 ஆயிரத்து 290 பேரும் ,அல்ஜீரியாவில் 2 ஆயிரத்து 912 பேரும்,கௌதமாலாவில் 2 ஆயிரத்து 899 பேரும் ,பேருவில் 2 ஆயிரத்து 371 பேரும், எல்சல்வடோரில் 2 ஆயிரத்து 270 பேரும், கொலம்பியாவில் 963 பேரும் , சிலியில் 807 பேரும் மற்றும் பிலிப்பைன்சில் 619 பேரும் கடந்த வருடம் காணாமல் போயுள்ளனர் என்று மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 17ஆம் திருவிழா



படங்கள் -அரவிந்

## கார்த்திகை ஊர்தியில் காவல் செய்ய வருகிறான்

கார்த்திகை ஊர்தியில் காவல் செய்ய வருகிறான்
காரியம் யாவும் நிறைவேற்றிட வருகிறான்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்
ஏத்தியே நாளும் முறையிட்டு கேட்கிறோம்
ஈழவர் கோரிக்கை ஏற்றிட வேண்டும்
போற்றியே உன்னருள் பெற்றிட வேண்டும்
புதியதோர் தீர்வது தமிழர்க்கு வேண்டும்

மதுரகவி.காரை.எம்.பி அருளானந்தன்

## கடைக்கண் பார்வை கிட்டாதோ?

நல்லூரான் திருவடியில் நற்பாதம் பணிந்திடவே
நர்த்தனத்தில் தினந்தோறும் வந்திடுவான் முருகன் இவன்
கார்த்திகை மைந்தனுமாம், நல்லூரின் அரசனுமாம்
காலங்களின் அழகனுமாய் வந்திடுவான் முருகன் இவன்!!!

தமிழர்களின் சோதனையும் வேதனையும் சொல்லியா அறிவாய் நீ?
தமிழ்க் குரலில் நாமுரைக்க அறிந்திடுவாய் முருகா நீ
தஞ்சமென்று ஓடிவந்தோம் தன்னருளை நாடி வந்தோம்
தஞ்சம் கேட்ட தமிழர்க்கு உம் கடைக்கண்பார்வை கிட்டாதோ?

செல்வன் நடேசு ஜெயவானுயன் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## கார்த்திகை கந்தா

கார்த்திகை திருநாளில்
கந்தனுக்குத் தீபம் ஏற்றி
நல்லை நகர் எங்கும்
நல்லொளி வீசும் வேளை-உன்
புகழ்பாடல் ஒலிக்க
பல்வாத்தியம் ஒன்றாய் முழங்க
தீபத்துள் ஒளிரும் கார்த்திகை கந்தா
நல்லூர் கார்த்திகேயா

க.வைஷ்ணவி

## “கவினுறு காட்சி தாராய்”

கார்த்திகேயா என நினை யழைத்து
இருகரம் கூப்பி நின்றால்,
சேர்ந்திடும் அருள், மருள் நீங்கிடும்
மாண்பு பெருகிடும் மாநிலத்தே
வார்த்தைக ளில்லை யப்பா நின்றன்
வடிவினைச் சொல்வதற்கே!
கார்த்திகை நாளில் கனகமயில்
ஏறி வந்து கவினுறு காட்சி தாராய்!

அரியாலையூர் வே.ஐ.வரதராஜன்


யாவரையும் காத்தருள வேண்டும் கார்த்திகேயனே!



ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரேடர்ஸ்

இல. 589, 591 கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 021 222 4579

இல. 71 நவீன சந்தை,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி
T.P- 077 377 6946


# குழந்தைகளுக்கு இதயத்தில் ஏற்படும் குறைபாடுகள்

இதயத்தின் அமைப்புப் பற்றியும் அதன் இயக்கம் பற்றியும் படித்திருப்பீர்கள். பொதுவாக பெரும்பாலான குழந்தைகள் ஆரோக்கியமான இதயத்துடன் தான் பிறக்கிறார்கள். அவர்களுடைய இதயத்தின் அமைப்பிலோ அல்லது அதன் செயற்பாட்டிலோ எந்தவிதக் குறைபாடும் இருப்பதில்லை.

ஆனால் சில குழந்தைகள் மட்டும் சிதைவுபட்ட அல்லது உருக்குலைந்த இதயத்துடன் பிறக்கின்றன. பிறவியிலேயே குழந்தைகளுக்கு இத்தகைய இதயக் குறைபாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள் இன்னும் முழுமையாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும் சில அடிப்படைக் காரணங்களை மருத் துவ உலகம் பட்டியலிடுகிறது.

மரபு ரீதியாக நமதுபண்புகளை நிர்ணயிக்கும் குரோமோசோம்களின் அமைப்பில் இயற்கையாகவே குறைபாடுகள் இருந்தால் பிறக்கும் போதே குழந்தைகளுக்கு உருக்குலைந்த இதயம் உருவாகக்கூடும். தாய்மைப் பேறு அடைந்த சில பெண்கள் கருவுற்ற தொடக்க நிலையில் வைரஸ் தாக்குதலுக்கு ஆளாகி பலவகையான நோய் களுக்கு இலக்காக நேரிடும்.

Atrial Septal Defect (ASD)




இந்த வைரஸானது கருவில் வளரும் இதயத்தையும் பாதித்து அதன் அமைப்பையோ அல்லது செயற்பாட்டையோ சிதைத்து விடும்.எனவே பெண்கள் கருவுற்ற தொடக்க நிலையில், வைரஸ்களால் ஏற்படும் பலவகையான தொற்றுநோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியம்.கருவின் ஆரம்பத்தில் கர்ப்பிணிப் பெண்கள்,ரூபெல்லா (RUBELLA) என்ற ஜேர்மன் தட்டம்மை நோய்க்கு ஆளானால் கருவானது பலவகைகளில் பாதிக்கப்படும். அதோடு இந்தநோய் இதயத்தையும் உருக்குலைத்து விடுகிறது.இந்நோயை தாய்மைப் பருவ தட்டம்மை என்றும் சொல்வதுண்டு.

பரம்பரை காரணமாகவும் பிறவியிலேயே இதயக் குறைபாட்டு நோய்களோடு குழந்தைகள் பிறக்கலாம்.ஒரு குடும்பத்தில் பெற்றோரோ அல்லது அவர்களின் முன்னோர்களோ இமயக்குறைக்கட்டால் பாதிக்கப்பட்டு இருந்தால் அந்தக் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கியமான குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளை விட இதயக் குறைபாட்டு நோய்களால் பாதிக்கப்பட வாய்ப்பு அதிகம்.


கர்ப்பக் காலத்தில் தாய்மார்கள் அறியாமல் செய்யும் சில தவறுகள் கூட இதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றன.கருவுற்ற தொடக்கக் காலங்களில் தாய்மார்கள் சாதாரண உடற் பிரச்சினைகளுக்காக மருத்துவர்களின் தக்க அறிவுரையும் ,பரிந்துரையும் இல்லாமல் தாங்களாகவே பலவகையான மருந்துகளை எடுத்துக் கொள்வார்கள்.

இந்த மாத்தி ரைகளைக் கட்டுப்பாடின்றி பயன்படுத்தும் போது அது கருவில் உள்ள குழந்தையின் இதயத்தையும் கடுமையாகப் பாதிக்கிறது.

கர்ப்பக் காலத்தில் பெண்கள் அளவுக்கு அதிகமாக எக்ஸ்ரே(X-Ray) கதிர்வீச்சுக்கு ஆளானாலும் கருவிலுள்ள குழந்தையின் இதயத்தில் உருக்குலைவு ஏற்படுகிறது. (தொடரும்)




# சுரப்பிகளின் சிறப்புகள்



நமது உடலில் இரண்டு முக்கிய கட்டுப்பாட்டு அமைப்புக்கள் உள்ளன.அவை நரம்பு உறுப்புக்கள் மற்றும் நாளமில்லாச் சுரப்பிகள்.இவை உடலுறுப்புக்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதுடன், ஒருங்கிணைந்த இயக்கங்களுக்கும் காரணிகளான அமைகின்றன.

நாளமில்லாச் சுரப்பிகளின் இரசாயன மூலக்கூறுகளுக்கு ஹோர்மோன் கள் என்று பெயர்.இவை உடல்நிலையை சீராக வைத்திருக்க உதவியாக இருக்கின்றன. இவற்றின் சிறப்புக்கள்,

ஹோர்மோன்கள் உயிர் வேதியியல் செயல்முறைகளைத் தாமாகவே ஏற்படுத்துவதில்லை.வளர்சிதை மாற்ற செயல்முறைகளை ஒழுங்குபடுத்தி, அவற்றின் செயல் வேகத்தை மாற்றி அமைக்கின்றன.

ஹோர்மோன்கள் இரத்தத்தில் மிகக் குறைந்த அளவில் உள்ளன.சில குறிப்பிட்ட தூண்டுதலின் காரணமாக ஹோர்மோன்கள் சுரக்கப்படுகின்றன.ஹோர்மோன்களின் சுரப்பு , ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தன்னிச்சையாக நடைபெறுகிறது.

ஹோர்மோன்கள், அவற்றின் செயல் முறையில் கிரியா ஊக்கிகளாகச் செயற்படுகின்றன.மேலும் உயர்ந்த இலகுத் தன்மை உடையவை.

ஹோர்மோன்கள் தொடர்ந்து செயலிழக்கும் போது,அவை உடலை விட்டு வெளியேற்றப்படுகின்றன.ஹோர்மோன்கள் செயற்கை முறையில் தயாரித்து, பிரித்தெடுத்து தூய்மைப்படுத்தலாம்.

# குழந்தைகள் விரல் சூப்பும் பழக்கத்தை எப்படி மாற்றுவது

குழந்தைகள் என்றாலே விரல் சூப்புவது என்பது இயல்பு தான்.நாம் என்ன தான் கையை எடுத்து விட்டால் குழந்தைகள் மீண்டும் மீண்டும் கையை வாய்க்குத் தான் கொண்டு செல்லும்.குழந்தை விரல் சூப்புவதற்கு முக்கிய காரணம்,தனக்கு முழுமையான பாதுகாப்பு கிடைக்கவில்லை என்று உணர்வதால் தான் என்கிறார்கள், உளவியல் அறிஞர்கள்.

மூன்று வயது வரை இந்தப் பழக்கத்தை பெரிதாக நினைக்கவேண்டிய அவசியமில்லை. தாயின் கருவறையில் இருக்கும் போதே இந்தப் பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் கவலை அடைய வேண்டிய அவசியமில்லை.குறிப்பிட்ட வயதில் இந்தப் பழக்கம் மாறிவிடும்.

நான்கு வயது வரை இந்தப் பழக்கம் நீடித்தால் குழந்தைநல சிறப்பு மருத்துவரிடம் காட்டி சிகிச்சை பெறுவது நல்லது. பெற்றோரிடம் தேவையான அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு ஆகியவை கிடைக்காத போது விரல் சூப்பும் பழக்கம் அதிகமாக இருக்கும்.

ஐந்து, ஆறு வயதில் இந்தப் பழக்கம் இருந்தாலும் மனநெருக்கடி மற்றும் அதிக கோபம் வரும்.கையில் கிடைத்தை எல்லாம் தூக்கி வீசுவார்கள்.இவர்களிடம் அதிகமாக அன்பு செலுத்தி அரவணைத்தால் மட்டுமே விரல் சூப்பும் பழக்கம் மாறும். நான்கு வயது முதல் 14 வயது வரை விரல் சூப்பும் சிறுவர்களுக்கு உடலில் பல மாற்றங்கள் நிகழும். ரி.வி.பார்க்கும் போது விரல் சூப்பும் பழக்கம் அதிகம் என்பதும் உண்மைதான்.

சிறுவர்களின் கவனம் முழுவதும் ரி.வி.க்குள் போய் விடுவதால் தங்களை அறியாமலேயே அந்தப் பழக்கத்தைக் கையாளுகின்றனர்.இதனால் குழந்தைகள் ரி.வி. பார்க்கும் போது தனியாக பார்க்கவிடாமல் பெற்றோர் துணையாக இருப்பது நல்லது. மேலும் குழந்தைகள் ரி.வி.பார்ப்பதை தவிர்க்க வேண்டும்.

விரல் சூப்பும் குழந்தையிடம் அந்தப் பழக்கத்தை மாற்றுவதற்காக பெரிய பிரச்சினைகளைச் செய்ய வேண்டாம்.வயது வந்த குழந்தைகளை,விரல் சூப்பும் பழக்கத்தை விட்டுவிடுமாறு கட்டாயப்படுத்துவதோ அல்லது அவர்களை அடிப்பதோ, உடலில் சூடு போடுவதோ கூடவே கூடாது. 4 வயதுக்கு மேல் அவர்களிடம் பக்குவமாக எடுத்துச்சொல்லி அவர்களைத் திருத்தலாம் அல்லது நிறைய அன்பு செலுத்தி அவர்களாகவே அந்தப் பழக்கத்தை நிறுத்த முயற்சிக்கலாம். குழந்தைகளுக்கு விரல்களுக்கு வேலை கொடுக்கும் விதமாக அவர்களை விளையாட வைக்கலாம். எதையாவது எழுதச் சொல்லலாம் அல்லது ஓவியம் வரைய வைக்கலாம்.


இப்படிக் கை விரல்களுக்கு வேலை கொடுத்தால் விரல் சூப்பும் பழக்கத்தை தன்னாலேயே மறந்து விடுவார்கள் குழந்தைகள்.அதேபோல,தூங்கும்போது அவர்கள் கையில் பொம்மையைக் கொடுத் தால் அந்தப்பொம்மையைப் பிடித்துக்கொள்வதில் கவனம் செலுத்தும் போது விரல் சூப்புவதை மறப்பார்கள்.

நன்றி:-தமிழக மருத்துவ சஞ்சிகை

# கொலஸ்ட்ரோல்

(சென்றவாரத் தொடர்ச்சி)

பொதுவாக விலங்கினங்களிடம் இருந்து கிடைக்கும் உணவு வகைகளிலும் பால், பாற்பொருட்கள் போன்றவற்றில் கொலஸ்ட்ரோல் மிக அதிகமாக உள்ளது.30 கிராம் எடையுள்ள ஆட்டு மூளையில் 1600 மில்லி கிராம் கொலஸ்ட் ரோல் உள்ளது.இதே எடையுள்ள கல்லீரலில் சுமார் 410 மில்லி கிராம் கொலஸ்ட்ரோல் உள்ளது.




Cholesterol from both sources can form plaques in your blood vessels

30 மில்லிகிராம் எடை யுள்ள ஆட்டு சிறுநீரகத்தில் சுமார் 330 மில்லி கிராம் கொலஸ்ட்ரோல் உள்ளது. வெண்ணெய் அகற்றப்படாத ஒரு கப் பாலில் சுமார் 35 மில்லி கிராம் கொலஸ்ட் ரோலும் வெண்ணெய் அகற்றப்படாத ஒரு கப் தயிரில் சுமார் 35 கிராம் கொலஸ்ட் ரோலும் உள்ளது.

காய்கறி வகைகள், கனிகள், பல வகையான தானிய வகைகளில் கொலஸ்ட்ரோல் மிகவும் குறைவான அளவில் உள்ளது. வெண்ணெய் நீக்கப்பட்ட ஒரு கப் மோரில் 9மில்லிகிராம் கொலஸ்ட்ரோல் மட்டுமே உள்ளது.

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு நம் உடலில் கொலஸ்ட்ரோல் அதிகமாகச் சேராதபடி உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொண்டால் இதயத்தைப் பாதுகாக்கலாம். இன்னொரு வழிமுறையையும் நீங்கள் பின்பற்றலாம்.

20 வயதைக் கடந்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஆண்டுக்கு ஒரு முறையாவது தங்களுடைய இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோலின் அளவை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

அதற்கேற்ப தங்களுடைய உணவு முறையைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிறந்த தற்பாதுகாப்பு முறை. ஒவ்வொருவரும் தங்களுடைய இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோலின் அளவைப் பரிசோதித்து 150 மில்லிகிராம் அளவுக்குள் வைத்துக் கொள்வது மிகவும் சிறந்த பாதுகாப்பு முறை எனலாம்.

**கொலஸ்ட்ரோல் நமது இதய நலனைப் பாதிக்காதவாறு நாம் மேற் கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள் என்ன?**

உடலின் எடையைச் சீரான அளவில் வைத்துச் சேர்த்துக்கொள்ளுங்கள். நார்ச்சத்து நிறைந்த தானியங்கள்,காய்கறிகளை அதி களவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

தினமும் குறைந்தது அரை மணி நேரமாவது உடற்பயிற்சி செய்யுங்கள். தினசரி உணவில் கொழுப்புச் சத்துக்கள் மிகுந்த உணவு வகைகளான வெண்ணெய், ஆட்டிறைச்சி,கொழுப்பு அகற்றப்படாத பால் ,முட்டையின் மஞ்சட்கரு போன்றவற்றை மிகவும் குறைவான அளவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை உங்களுடைய இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோலின் அளவைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

# பறவைகள் சரணாலயம் எனும் பெயரில் தமிழரின் பூர்வீக நிலங்கள் சூறையாடப்படுகின்றன

2008 ஒகஸ்ட் மாதம்-வன்னிப் பெரும்போர் தீவிரமடைந்திருந்த காலப் பகுதி மன்னார், முருங்கன் பிரதான வீதியிலுள்ள இராணுவத் தளங்கள் மற்றும் தள்ளாடி முகாம் என்பவற்றிலிருந்து வன்னிப் பெரு நிலப் பரப்பை நோக்கி அகோரமான எறிகணை வீச்சுக்களும் குண்டு வீச்சுக் களும் இடம்பெற்றுக் கொண்டிருந் தது. இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக மடு, அடம்பன் ஆகிய பிரதேசங்களிலிருந்து மக்கள் அனை வரும் திக்கு திசை தெரியாது போக் கிடமின்றி அலைந்து கொண்டிருந்த னர். வன்னிப் பெரும் அவலம் ஒரு புறம் நிகழ்ந்து கொண்டிருக்க மறு புறம் தள்ளாடி இராணுவமுகாமைச் சூழவுள்ள பெரும் நிலப்பரப்பு ஒன்று பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் சத்தம் சந்தடியில்லாது ஆக்கிரமிப்புக்குள்ளாகியது. வங்காலை சரணாலயம் என்ற பெயரில் 156/3 ஆம் இலக்கமும், 08.09.2008 திகதியும் கொண்ட வர்த்தகமானியில் இப்பிரதேசம் தொடர்பான விபரங்கள் சூழல் மற்றும் இயற்கைவள அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

**இதன் விபரம்**

*"(469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப் பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் பாட்டலி சம்பிக் கரணவக்க ஆகிய நான் இதற்கான அட்டவணையில் விபரிக்கப்படும் காணி யின் இடப் பரப்பை மேற் கூறப்பட்ட நோக்கத்திற்கு சரணாலயம் ஒன்றாக வெளிப்படுத்துகின்றேன். அத்துடன் சொல்லப்பட்ட காணியின் இடப்பரப்பு 'வங்காலை சரணாலயம்' என அழைக் கவும் குறிப்பீடு செய்யப்படவேண்டும்" எனவும் இக்கட்டளையின் மூலம் மேலும் வெளிப்படுத்துகின்றேன்.*


*பாட்டலி சம்பிக்கரணவக்க*
*சூழல் மற்றும் இயற்கை*
*வளங்கள் அமைச்சர்*
*2008- ஒகஸ்ட் 21.*

வடமாகாணம் , மன்னார் நிர்வாக மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த வங்காலை சரணாலயத்தின் பரப்பளவு அண்ணளவாக 4838.95 ஹெக்டேயர் ஆகும். இது பறவைகளுக்கான சரணா லயம் 'என்பது குறிப்பிடத்தக்கது.

**அமைவிடம்**

இந்த சரணாலயமானது மன்னார் தீவுக்கும் பெருநிலப் பரப்புக்கும் இடைப்பட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தள்ளாடி பெரும் படைத் தளத்தைச் சூழ்ந்து இட அமைப்பு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ சதுர வடிவைக் கொண்ட இப்பரப்பின் எல்லைகளாக மன்னார் பள்ளிமுனையிலிருந்து தென் கிழக் காக திருக்கேதீஸ்வரம் வரையும், அங்கிருந்து தென் மேற்கே வங் காலை வரையும், வங்காலையிலிருந்து வடமேற்கே சவுத்பார், சவுத்பாரிலி ருந்து கிழக்காக பள்ளிமுனை வரை யிலான எல்லைகளைக் கொண்டதாக வரையப்பட்டுள்ளது.

இக்குறித்த சரணாலய பிரதேசமா னது. பறவைகள் நாடி வந்து புகலிடம் கொள்வதற்கான பொருத்தமான சூழலைக் கொண்ட ஒரு பகுதி என் பதில் சந்தேகமில்லை. உவர் நீர் ஏரி களையும், வற்றுப் பெருக்கு மேடுக ளையும், சதுப்பு நிலத்தாவரங்கள் மற் றும் கண்டற்தாவரங்களையும் கொண்ட சூழற்றொகுதியாக இது. இயற்கை அமைவு பெற்றுள்ளது.




மாரி காலத்தில் கிடைக்கும் மழை யினால் இப்பிரதேசம் நீரால் நிரம்பி வழியும். நன்னீரும் உவர் நீரும் கலக் கின்ற இப்பரப்பில் பருவ காலங்களில் குறிப்பாக மாரிப் பருவத்தில் மிகத் தொலைதூர நாடுகளிலிருந்து பல் வேறுவகையான பறவைகள் பெருமள வில் இடம்பெயர்ந்து இங்குள்ள நீரோ டைகளில் தங்குகின்றன. பருவகாலம் முடிந்ததும் மீண்டும் திரும்பிச் சென்று விடுகின்றன. குறித்த காலப் பகுதியில் இவ்வீதியால் பயணிப்போர் பல்வேறு வகையிலான பறவைகள் பறந்து திரி யும் காட்சியைக் கண்டு மகிழ்வர். முக்கியமாக 'சைபீரியன்டக்' எனப்ப டும். தாராக்கள் , நாரைகள் , கூழக் கிடாய் எனப்படும் பறவைகள் , கொக்குகள் , கோட்டான்கள் என பல் வேறு இனப் பறவைகளை இங்கு காணலாம். பறவைகளுக்கான மிகப் பொருத்தமான பகுதி இப்பகுதி என் பதில் எவ்வித ஐயமுமில்லை.

தள்ளாடி இராணுவ முகாமைப் பார்த்து பெருமூச்சு விடுவோர்களுக்கு இந்த பறவைகளின் காட்சியானது ஒரு ஆறுதலாக இருக்கும்.


மன்னார் தீவினையும் பெருநிலப் பரப்பையும் இணைக்கின்ற வீதியின் இருமருங்கிலும் பரந்துள்ள உவர் நீர் வற்று மேட்டு நிலப்பகுதிகள் சவுத் பாரிலிருந்து பள்ளி முனை கரைவரை ஈறான பகுதிகளும் திருக்கேதீஸ்வரம் மற்றும் வங்காலை கிராமத்தின் வட எல்லை சவுத்பாரினது தென் கரை யோர வங்காலை உள்ளடக்கிய பகுதி யாகும். முக்கியமாக இதன் மத்திய பகுதி தாளையடி படைத்தளத்திலிருந்து விஸ்தரிக்கப்படுகிறது. இந்நிரந்தரப் பிரதேசம் நவம்பர்-டிசம்பர் பருவத்தில் மாரி காலம் தூர நாடுகளிலிருந்து இப் பகுதிக்கு வருகின்ற பல்வேறு பற வையினங்கள் இப்பகுதியில் சஞ்ச ரித்து பருவம் முடிந்தும் திரும் புகின் றன.போர் தீவிரமடைந்த காலத்தில் இது மிகவும் பாதிப்படைந்தது.

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் பரவலாக செறிந்து வாழு கின்ற ஒரு பகுதியாகும். தனித்துவ மான கலாசாரம் பாரம்பரியங்களைக் கொண்ட ஒரு தேசிய இனம் தமி ழினம் இந்நாட்டின் சிறுப்பான்மையி னராக இருப்பதினால் அரசற்ற தேசி யமாகவே இருந்து வருகின்றது. சிங்கள தேசியமானது தமிழ் தேசத் தின் வாழ்விடங்களை சிதைத்து வரு கின்றது.

குறித்த இந்தப் பிரதேசமானது சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப் பட்ட காலப்பகுதியும், சூழலும் பல த்த சந்தேகங்களையும் பீதியையும் இப் பகுதி சார்ந்த மக்களிடையே எழுப் பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரும் போர் தீவிரமடைந்திருந்த வேளையில் அதுவும் முக்கிய இராணு வத்தளமான தள்ளாடி இராணுவ முகாம் அமைந்துள்ள சூழலில் இது பிரகடனப்படுத்தப்பட்டதானது, பற வைகள் சரணாலயம் என்ற போர் வையில் தமிழ்த் தேசியத்தின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. இக் குறித்த பகுதி ஏற்கனவே உயர் பாது காப்பு வலயமாக பிரகடனப்படுத் தப்பட்டதுடன் சிறிய தளமாக இருந்த தள்ளாடி இராணுவத்தளம் பெரியதள மாக விஸ்தரிக்கப்பட்டும் இருந்தது. இதன் எல்லையோரமாக இருந்த மாந்தை , எள்ளுப்பிட்டி , திருக்கேதீஸ் வரம் , சிறுநாவற்குளம் , பெரிய நாவற் குளம் , முள்ளிப்பள்ளம், நாகதாழ்வு மற் றும் வங்காலை ஆகிய கிராமங்கள் முகாம் விஸ் தரிப்புக்காரணமாக பாரிய அழிவுக்குள்ளா கியி ருந்தன.

இன்று வங்காலை கிராமம் தவிர்ந்த ஏனைய கிராமங்களி லுள்ள மக்கள் அனை வரும் தம் இருப்பிடங் களை விட்டு வெளி யேறியுள்ளனர். இருதசாப்தங்கள் கடந்த நிலையிலும் இன்றும் இப்பகுதி மக்கள் மீளத் திரும் பவில்லை. இவ்வாறு குடியிருப்புக்கள் பல பாடசாலைகள் , வழிபாட்டுத்தலங்கள், பொதுக்கட்டடங்கள் அனைத்தும் அழிவ டைந்து போயிற்று. பல்லாயிரக் கணக்காள பனை மரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டதுடன் வயல் வெளிகள் வீடுகள் எல்லாம் இராணுவ முகாம் களாக ஆக்கப்பட்டு விட்டன.



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1566/3 - 2008 සැප්තැම්බර් 08 වැනි සඳුදා - 2008.09.08

1566/3 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I)- பொது

அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி.9/73

(469 ஆம் அத்தியாமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படும் காணியின் இடப்பரப்பை மேற்கூறப்பட்ட நோக்கத்திற்கு சரணாலயமொன்றாக வெளிப்படுத்துகின்றேன். அத்துடன் சொல்லப்பட்ட காணியின் இடப்பரப்பு "வங்காலை சரணாலயம்" என அழைக்கவும் குறிப்பீடு செய்யவும் பட வேண்டும் எனவும் இக்கட்டளையின் மூலம் மேலும் வெளிப்படுத்துகின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர்.

கொழும்பு,
2008, ஒகத்து 21.

அட்டவணை

வங்காலை சரணாலயத்தின் எல்லைகள்

வட மாகாணம், மன்னர் நிர்வாக மாவட்டத்தில் அமைந்துள்ளதும் அண்ணளவாக 4838.95 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்டதும் பின்வரும் சமவரிசைகளை எல்லைகளாகக் கொண்டதுமான காணியின் இடப்பரப்பு முழுவதும் :-

106 611 E 419 400 N
111 365 E 416 487 N
111 316 E 416 099 N
110 783 E 416 245 N
108 988 E 412 160 N
110 104 E 41[illegible] 345 N
107 096 E 409 065 N
102 051 E 417 263 N
102 731 E 417 942 N
103 264 E 417 360 N

9 - 867

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

1A

எல்லாவற்றுக்கும் மேலாக புகழ் பெற்ற பாடல் திருத்தலமான திருக் கேதீஸ்வரம் ஆலயமும் பாலாவி நீரோ டையும் அதன் பொலிவை இழந்து போயின. அவ்வப்போது பக்தர்கள் கட்டுப்பாடுகளுடன் வழிபட அனும திக்கப்படுகின்ற போதிலும் இவ்வா லயம் இவ்வாறு பாதுகாப்பு வலயத் துள் உட்படுத்தப்பட்டிருப்பது கவலை தரும் விடயமாகவே உள்ளது.

வடமாகாணம் மன்னார் நிர்வாக மாவட்டத்தில் தள்ளாடி பெரும் படைத்தளத்தைச் சூழவுள்ள பிரதே சமானது 2008 ஆம் ஆண்டு முன்னாள் சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் சம்பிக்கரணவக் கவினால் "வங்காலை பறவைகள் சர ணாலயம்" என பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. ஏறத்தாழ 5000 ஹெக்ரயர் பரப்புக் கொண்ட இச் சரணாலயம் மன்னார் தீவாகும். பிரதான நிலப்பரப் பையும் இணைகின்ற பிரதான வீதி யின் இருமருங்கிலுமுள்ள ஏரிப் பகுதியின் வற்று மேடுகளையும் தள்ளாடி முகா மைச் சூழவுள்ள பரந்த பகுதியையும் உள்ளடக்கியிருக்கிறது.

2008 இல் வன்னிப் பெரும் போர் தீவிரமாக நடைபெற்றுக் கொண் டிருந்த காலம், அடம்பன் மற்றும்மடு ஆகிய பகுதியிலிருந்து மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது மக்கள் தமது இருப்பிடங்களை யிழந்து சொல்லொனாத் துயரங்க ளுக்கு உள்ளாகியிருந்தனர். இக்காலப் பகுதியில் இந்தப் பறவைகள் சரணாலயம் பிரகடனப்படுத்தப்பட்டி ருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்து ஒருவரு டம் கழிந்த நிலையில் வன்னி இடம் பெயர்வு மக்கள் படிப்படியாக தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். மடு, அடம்பன் பகுதியைச் சேர்ந்தோர். மீளவும் தமது இருப்பிடம் திரும்பியுள்ள நிலையில் பல வருடங்களின் முன்னர் தள்ளாடி முகாமை அண்டிய பகுதிகளிலிருந்து வெளியேறிய எவரும் இன்னமும் மீளக்குடியமர்த்துவதற்கான முயற்சி கள் எவையும் இதுவரை மேற் கொள் ளப்படவில்லை. முக்கியமாக மாந்தை, திருக்கேதீஸ்வரம் , சிறுநாவற்குளம், பெரியநாவற்குளம் மற்றும் நாகதாழ்வு ஆகிய கிராமங்கள் முற்றாக நாச மடைந்து அழிவுற்றுப் போய்க் கிடக்கின்றன. இங்கிருந்து வெளி யேறியோர். மீளத் திரும்புவதற்கு தள்ளாடி இராணுவ முகாம் விஸ் தரிப்பு பெரும் தடையாக அமைந் துள்ளன.

உயர் பாதுகாப்பு வலயம் நீக் கப்பட்டு விஸ்தரிக்கப்பட்ட இராணு வமும் பழைய நிலைக்கு முடக்கப் பட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் குடியேறி தமது இயல்பு வாழ்வை கட்டியெழுப்ப அனுமதிக்கப்படுவார் களா?

**கலாநிதி**
**சூசை ஆனந்தன்**

கைவிடப்பட்ட விவசாய நிலங்கள் மீண்டும் விளை நிலமாக மாற நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சுதந் திரமாக பக்தர்கள் சென்று வழிபட ஆவன செய்யப்படுமா?

இப்பகுதி பாடசாலைகளும் பொது சேவை நிலையங்களும் மீண்டும் ஆரம் பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்ப டுமா?

அல்லது, பறவைகள் சரணாலயம் என்ற பாணியில் தமிழ்த் தேசியத்தின் நிலம் சூறையாடப்பட்டு தள்ளாடி படைத்தளம் நிரந்தரமாகவே அப்பிர தேசத்திலேயே நிலைக்குமா? என்ப தெல்லாம் இனி போகப் போகத்தான் தெரியவரும். தமிழ்த் தேசியத்தின் வளமிக்க நிலங்கள் புதிய பாணியில் சூறையாடப்பட்டு வருவதற்கு மன்னார் 'பறவைகள் சரணாலயம்' நல்ல எடுத்துக்காட்டு. ✦ ✦ ✦

# சீனாவில் நிலநடுக்கம்; 7300 வீடுகள் சேதம்

சீனாவில் யுன்னான் மற்றும் சிசுயான் ஆகிய 2 மாகாணங்களில் நேற்று முன் தினம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதைத் தொடர்ந்து 7 ஆயிரத்து 354 வீடுகள் சேதமடைந்தன.122 வீடுகள் முற்றிலும் சேதம் அடைந்தன. இதனால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓட்டம் பிடித்தனர்.

நிலநடுக்கதைத் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி 14 பேர் காயம் அடைந்தனர். யுன்னான் மாகாணத்தில் குயாஜியோ பகுதியில் பெரும்பாலான வீதிகள் மண்ணுக்குள் புதைந்தன. நிலநடுக்கம் 4.8 ரிக்டர் அளவில் பதிவாகி இருந்தது.

இந்த ஆண்டு சீனாவில் 2 ஆவது முறையாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள குயின்காய் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 ஆயிரத்து 800 பேர் பலியாகினர். ஆயிரக்கணக்கானவர்கள் காயம் அடைந்தனர். (ஸ்ரீ-2)

# ஐ.நா.சபை மூலமாக இந்தியா உதவியை ஏற்றுக்கொள்ள பாகிஸ்தான் விருப்பம்

(இஸ்லாமாபாத்)


இந்தியா வழங்க முன்வந்துள்ள வெள்ள நிவாரண நிதியை முதலில் ஏற்க தயக்கம் காட்டி பின்னர் ஏற்றுக் கொள்வதாக அறிவித்த பாகிஸ்தான் தற்போது அந்த நிதி உதவி யை நேரடியாக ஏற்றுக் கொள்ளாமல் ஐக் கிய நாடுகள் சபை மூலமாக ஏற்க தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தானில் ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு குழுக்கள் வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் பணியாற்றி வருகின்றன. எனவே ஐக்கிய நாடுகள் சபை மூலமாக நிதி உதவியை அளிக்குமாறு இந்தியாவுக்கு தகவல் அனுப்பியுள்ளோம் என அந்நாட்டு வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் பாசித் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் கொள்கைப்படி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# அமெரிக்க படையினர் அனைவரும் 2011 இறுதிக்குள் நாடு திரும்புவர்

## பராக் ஒபாமா அறிவிப்பு



(வோஷிங்டன்)

ஈராக்கில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் எஞ்சிய அமெரிக்க படையினர் அனைவரும் 2011 ஆம் ஆண்டு இறுதிக்குள் நாடு திரும்புவர் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு வானொலி மற்றும் இணையத்தளம் மூலம் வாராந்திர உரை நிகழ்த்திய பராக் ஒபாமா இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

ஈராக்கில் போர் முடிவுக்கு வந்துள்ளது. அங்கு தற்போது எஞ்சியிருக்கும் அமெரிக்கப் படையினர் எதிர்வரும் மாதங்களில் ஈராக் படையினருக்கு பயிற்சி அளிப்பது, பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் உதவுவது, பொதுமக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்துவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நான் போட்டியிட்ட போது ஈராக் போரை 2010 ஆம் ஆண்டுக்குள் முடித்து விடுவேன் என்று உறுதி அளித்திருந்தேன். தற்போது அதனை நிறைவேற்றி வருகின்றேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்றதில் இருந்து இதுவரை 90 ஆயிரம் அமெரிக்க படையினரை நாடு திரும்ப வைத்துள்ளேன்.

தற்போது ஈராக்கின் பல இடங்களில் பாதுகாப்பு பணிகளை அந்நாட்டு படையினரே தலைமையேற்று கவனித்து வருகின்றனர்.

ஈராக்கில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட அமெரிக்கப் படைகளின் வீரத்தையும் அர்ப்பணிப்பையும் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் எஞ்சியுள்ள படையினர் அனைவரும் நாடு திரும்பி அமெரிக்காவை பாதுகாக்கும் பணிகளைத் தொடர்வார்கள் என்று பராக் ஒபாமா கூறினார். (ஸ்ரீ-2)

# அமெரிக்காவிலிருந்து 13 இலட்சம் கார்களை ஜப்பான் திரும்பப் பெறுகிறது

ஜப்பான் கார் உற்பத்தியாளர்களான டொயோட்டா நிறுவனம் அமெரிக்காவிலிருந்து 1.13 மில்லியன் கார்களை திரும்பப் பெறுகிறது. இந்த வாகன இயந்திரத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக தொடர்ந்து முறைப்பாடு செய்யப்பட்டமையே இதற்கான காரணமாகும்.


டொயோட்டா நிறுவனம் இந்த ஆண்டில் 15 ஆவது முறையாக கார்களை திரும்பப் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானின் முன்னணி கார்கள் தயாரிப்பு நிறுவனமான டொயோட்டா நிறுவனம் இந்த ஆண்டில் மட்டும் சர்வதேச அளவில் 11 மில்லியின் கார்களை திரும்பப் பெற்றுள்ளது.

(ஸ்ரீ-2)



விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி ராஜபாளையத்தில் 6 அடி உயரத்தில் பச்சரிசி மா, மைதாவால் விநாயகர் சிலையை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சிற்பக் கலைஞர்.



பஹாமாஸில் உள்ள நாசாவுவில், பாரடை ஸ்தீவின் அட்லாண்டிக் குடியிருப்பில் கட்டடங்களுக்கிடையில் 100 அடி (31 மீற்றர்) உயரத்தில் 260 அடி (79 மீற்றர்)நீளக் கம்பியை கட்டி நிக் வாலென்டா என்பவர் சைக்கிள் ஓட்டி கின்னஸ் சாதனையைப் படைத்தார்.

# காளஹஸ்தி சிவன் கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் அமைப்பு

பஞ்ச பூதத் தலங்களில் வாயு தலமாக விளங்கும் காளஹஸ்தி சிவன் கோயிலுக்கு புதிதாக 30 கோடி மதிப்பீட்டில் இராஜகோபுரம் கட்டப்பட உள்ளது. இதற்கான அடிக்கல்லை ஆந்திர முதல்வர் ரோசய்யா நேற்று முன்தினம் நாட்டினார்.


ஆந்திரா மாநிலம் காளஹஸ்தி கடந்த மே மாதம் 26ஆம் திகதி இராஜகோபுரம் இடிந்து விழுந்தது. கோபுரம் இருந்த இடத்திலேயே 30 கோடி செலவில் புதிய இராஜகோபுரம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நடந்தது.

இதையொட்டி காளஹஸ்திக்கு முதல்வர் ரோசய்யா நேற்று முன்தினம் காலை 6.20 மணிக்கு வந்தார். அவருக்கு சிவன் கோயில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க பூரண கும்ப மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு அளித்தனர். பின்னர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோயில் தலைமை செயல் அதிகாரி ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி மற்றும் அதிகாரிகள் சிறப்புப் பிரசாதங்களை வழங்கினர்.

பின்னர் இராஜகோபுரம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா கோயில் வளாகத்தில் நடந்தது. அடிக்கல்லை முதல்வர் ரோசய்யா நாட்டினார். (ஸ்ரீ-2)

# மைக்கேல் ஜாக்சனின் உடல் தோண்டி எடுக்கப்படுகிறது

## மீண்டும் பிரேத பரிசோதனை நடத்த முடிவு




(நியூயோர்க்)

உலகப் புகழ் பெற்ற பொப்பாடகர் மைக்கேல் ஜாக்சன் கடந்த ஆண்டு மே மாதம் மர்மமான முறையில் இறந்தார். அவரது குடும்ப டாக்டர் கனாட் முர்ரே கொடுத்த நச்சுத்தன்மை வாய்ந்த மருந்து மாத்திரைகளால் அவர் மரணம் அடைந்தது விசாரணையில் இருந்து தெரிய வந்தது. எனவே டாக்டர் முர்ரே மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து 3 தடவை நடந்த பிரதேச பரிசோதனைக்குப்பின் மைக்கேல் ஜாக்சன் உடல் புதைக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு அடுத்த ஆண்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. இந்த நிலையில் மைக்கேல் ஜாக்சன் தான் புது தெம்புடன் நடனமாடும் வகையில் மருந்து மாத்திரைகளை பயன்படுத்தியதாகவும் அதனால் தான் அவர் மரணத்தைத் தழுவியதாகவும் வாதாடத்திட்டமிட்டுள்ளனர்.

எனவே புதைக்கப்பட்ட அவரது உடலை மீண்டும் தோண்டியெடுத்து பிரேத பரிசோதனை நடத்த திட்டமிட்டுள்ளனர்.அதற்கான நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் .இது மைக்கேல் ஜாக்சன் குடும்பத்தினரை அதிர்ச்சியிலும் கவலையிலும் ஆழ்தியுள்ளது. (ஸ்ரீ-2)



மரணமடைந்தவர்களை கங்கை ஆற்றில் விடுவது இந்துக்களின் புனிதமாக கருதப்படுகிறது. தற்போது கனமழை காரணமாக உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத் வாரணாசி

நல்லது போனால் தெரியும். கெட்டது வந்தால் தெரியும்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஜே.ஆர் .செய்தது பிழை அதைத் திருத்தியது பெரும் பிழை

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையின் விஸ்வப் பிரம்மா ஜே.ஆர்.ஜயவர்த்தன என்பது தெரிந்த உண்மை. இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக பதவி வகித்த ஜே.ஆர்.ஜயவர்த்தன மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக இருக்க விரும்பியிருந்தாலும், அப்போது பிரதமராக இருந்த ஆர்.பிரேமதாச அதற்கு இடங் கொடுக்கவில்லை.

இதனால் ஜே.ஆர்.ஜயவர்த்தன கவலையோடு வீடு சென்றார். தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை பொருத்தமானதல்ல என்பதை அவர் பின்னாளில் உணர்ந்து கொண்டதாக அவருடன் நெருக்கமானவர்கள் கூறியதுண்டு.

நிறைவேற்று ஜனாதிபதியாக ஒருவர் இரண்டு தடவைகளே இருக்க முடியும் என்ற யாப்பின் எல்லைப்படுத்தல் இப்போது இன்னும் ஒரு தடவை அதிகரிக்கப்பட்டு மூன்று தடவையாக்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தலையெடுக்காமல் தடுப்பதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை கொண்டு வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் நரித் திட்டம் இப்போது தவிடு பொடியாகிவிட்டது.

எந்தக் கட்சியை தலையெடுக்காமல் தடுப்பதற்காக ஜே.ஆர்.ஜயவர்த்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறையைக் கொண்டு வந்தாரோ அந்தக் கட்சிக்கே அந்த அரசியல் யாப்பு உதவியாயிற்று என்ற உண்மையை அறியலாம்.

இதில் வேடிக்கை என்னவெனில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஒருவர் மூன்று தடவைகள் இருக்கலாம் என அரசியல் திருத்தம் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாகும்.

நாட்டில் எதுவும், எப்போதும், எப்படியும் நடக்கலாம் என்பதை ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அனுபவத்தில் நாம் காணக்கூடியதாக இருந்த போதிலும், அத்தகையதொரு நிலை எவருக்கும் ஏற்படலாம் என்பதை மறந்து அரசியல் திருத்த நாடகம் நடந்துள்ளது.

பரவாயில்லை, இலங்கைத் திருநாட்டில் அரசியல் யாப்புக்கள், திருத்தங்கள் என அத்தனையும் தனி மனித விருப்புக்கானதாகவும் பெரும்பான்மை இனத்தின் நலனுக்கானதாகவும் இருக்கும் துரதிர்ஷ்டம் தொடரவே செய்கின்றது.

ஏதோ! நடந்து முடியட்டும். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அதாவது மூன்றாவது தடவையாகவும் ஒருவர் ஜனாதிபதியாக இருக்கலாம் என்று கொண்டு வந்த அரசியல் அமைப்புத் திருத்தம் பெரும் பிழையாகி விட்டது என்று அதைச் செய்தவர்களே நிச்சயம் நினைப்பார்கள் – உணர்வார்கள்.

அப்போது மறுபுறத்தில் நான்காவது தடவையும் ஜனாதிபதியாக இருப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும்.

# நல்லூரில் ஆதீனம் அமைத்து அரும்பணியாற்றிய நல்லைக் குருமணி



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று 44 ஆவது பீடாரோஹண விழா நடைபெறுகின்றது. இந்தியாவில் உள்ளதைப் போன்று இலங்கையிலும் ஓர் ஆதீனத்தை நிறுவ வேண்டும் என்ற உயரிய நோக்கில் 1966 ஆம் ஆண்டு நல்லூரிலே ஆதீனம் அமைத்து அரும்பணி செய்தவர் நல்லைக் குருமணி.

கதாப்பிரசங்கம் செய்வது இவருக்குக் கைவந்த கலை. ஈழத்தின் பல பாகங்களுக்கும் சென்று பிரசங்கம் செய்து சைவத்தமிழ் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் லண்டன் முதல்தர நாடுகளுக்கும் சென்று கதை செய்துள்ளார்.

தோற்றத்தில் நாவலரை ஒத்த இவர் சங்கீதம் கலந்த கதாப்பிரசங்கத்தினால் அனைத்து மக்களினதும் பேராதரவைப் பெற்று உயர்பணியாற்றினார். இன்று நாம் 'சைவன்' என்று சொல்லிக் கொண்டு தலைநிமிர்ந்து நெற்றியில் திருநீறு துலங்க வளைய வருகின்றோம் என்றால் அதற்கு வித்திட்டவர் நல்லைக் குருமணியே.

முற்றுமுழுதாகச் சமய வளர்ச்சிக்கே தம்மை அர்ப்பணித்து இடையறாத விடாமுயற்சியோடு அரும்பாடுபட்டு

## இன்று நல்லைக் குருமணியின் 44 ஆவது பீடாரோஹண விழா

நல்லை ஆதீனம் மூலமாகச் சேவை செய்தவர் சுவாமிகள் என்று கூறினால் அது மிகையாகாது.

பண்ணிசை, இன்னிசை, வயலின், மிருதங்கம், நடனம் மற்றும் வீணை என்று பல கலைகளும் வளரத் தமது ஆதீனத்திலே வகுப்புக்கள் நடத்தி மக்களை ஊக்குவித்தவர் நல்லை சுவாமிகள்.

தம்முடைய தொண்டையினாலேயே தொண்டாற்றிய இவர், யாழ்ப்பாணத்திலே இருக்கின்ற பிரசித்தமான கோயில்களிலும் மற்றும் சமய விழாக்களிலும் பங்காற்றிப் பிரசங்கம் செய்து மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம்பெற்றுவிட்டார்.

இன்று நல்லூரில் நடைபெறுகின்ற பீடாரோஹண விழாவில் குருமூர்த்த ஆலயத்திலிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் மிக விமரிசையாக நடைபெறும்.

அதைத் தொடர்ந்து விசேட தீபாராதனை, பூசை வழிபாடுகளின் பின்னர் வேதபாராயணம் ,தேவார பாராயணம், புராணபடனம், கொலுப்பூசை, பட்டணப்பிரவேசம், வீதிவலம் ஆகியன இடம்பெறும்.

யாழ்.பருத்தித்துறை வீதியிலே நல்லூர்க் கந்தன் ஆலய மேற்கு வீதியில் அமைந்திருக்கும் இந்த நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம் யாழ்.நகர் வாழ் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றுகின்றது. மழலை பேசும் குழந்தைகள், கல்வி பயின்று முன்னேறும் பாலர் பாடசாலைகள், சமய பாட வகுப்புக்கள் மற்றும் கலை பயில் வகுப்புக்கள் என்று இன்னோரன்ன பலவும் இந்த நல்லை ஆதீனத்தில் நடைபெறுகின்றன.

இது ஒருபுறமிருக்க 'சைவசமயி' என்று உரிமையோடு சொல்வதற்கான சமய தீட்சையும் இந்த ஆதீனத்தில் வழங்கப்படுவது சிறப்புக்குரியது.

இது எல்லாவற்றுக்கும் மேலாக இப்பொழுது ஆதீன சுவாமியாக விளங்குகின்ற இரண்டாவது குருமஹா சந்நிதானம் யாழ்ப்பாணத்திலே எங்கெல்லாம் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று அருளாசியுரை வழங்கி நம்மவரை நெறிப்படுத்தி வருவது மகிழ்ச்சிக்குரியது.

முன்பு நல்லைக் கந்தன் உற்சவ காலங்களில் நல்லை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் மகாபாரதம் ,சம்பூர்ண ராமாய ணம், திருவிளையாடற் புராணம் மற்றும் திருத்தொண்டர் பெரிய புராணம் ஆகியவை தொடர் விரிவுரையாக ஆலய முன்பாக அமைக்கப்படும் தண்ணீர்ப் பந்தலில் இரவு 11 மணி வரையும் நடைபெற்றிருக்கிறது.

**சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்**

எனவே நல்லை ஆதீனத்தில் இன்று நடைபெறுகின்ற 44 ஆவது பீடாரோஹண விழாவுக்கு முருகன் அடியார்கள் அனைவரும் வந்து சிறப்பிக்குமாறு இப்பொழுதுள்ள இரண்டாம் குருமஹா சந்நிதானம் அழைப்பு விடுக்கின்றார்.

சைவசமயிகள் ஒவ்வொருவரும் இந்த நல்லை ஆதீன செயற்பாடுகளுக்கு இயன்றளவு உதவிபுரிந்து அவன் அருளாலே அவன்தாள் வணங்கி இப்பூவுலக நல்வாழ்வுக்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

# உள்ளூராட்சி அதிகாரசபை சட்டமூலம் பசில்- சந்திரகாந்தன் பேச்சுவார்த்தை

(மட்டக்களப்பு)

உள்ளூராட்சி அதிகாரசபை (விசேட ஏற்பாடு திருத்தச் சட்ட மூலத்தின் கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தையொன்று தனக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்குமிடையில் இடம்பெற்றதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

சட்ட மூலத்தை சில திருத்தங்களுடன் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தச் சட்ட மூலத்தில் குறிப்பிட்ட சில விடயங்களில் தெளிவின்மை இருப்பதாகவும் அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி அதிகார சபை (விசேட ஏற்பாடு) திருத்தச் சட்ட மூலத்தை கடந்த வருடம் கிழக்கு மாகாண சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும், தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தவருக்கு பாதகம் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் எதிர்த்தமையால் அச்சட்ட மூலத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முன்னைய சட்டமூலம் தொடர்பாக சிறுபான்மையினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை உள்ளடக்கிய திருத்தச் சட்ட மூலமொன்றை தயாரித்து தன்னிடம் கையளிப்பதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாக முதலமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு புதிதாக தயாரிக்கப்படும் உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் சிறுபான்மையினருக்கு பாதிப்பில்லாத வகையில் இருக்கும் பட்சத்தில், அடுத்த மாகாண சபைக்கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (சு-5)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



உனக்கு ஏதாவது தீங்கு நேருமாயின் இறைவன் உன்னுடன் விளையாடுகிறான் என் நினைத்து, மட்டற்ற மகிழ்ச்சியுடன் இரு.

ஆரம்ப காலத்தில் தீயோரின் தொடர்பைத் தவிர்த்து விடு. உலகியலில் தொடர்பு கொள்ளாதே. அது உனது மனப்போக்கை மாற்றிவிடும்.

நான், எனது என்னும் எண்ணங்களை விட்டுவிடு. உலகில் தனக்கென எதுவும் இல்லாதவனை நாடியே இறைவன் வருகிறார். ஆன்மாவில் நிலைத்திரு. அப்போது தான் உலகத்தை நேசிக்க முடியும். எப்போதும் மிகவுயர்ந்த நிலையில் இரு.

# மாணவ தாதியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல் -2010

சுகாதார அமைச்சின் (கொழும்பு) அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மாணவ தாதிய பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள வடமாகாணத்தில் வாழும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து (விவாகமாகாத) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டு திருப்திகரமாக பயிற்சியை முடிப்பவர்கள் வடமாகாணத்தில் இவ்வமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளில் தாதியர்களாக நியமிக்கப்படுவர்.

***I. கல்வித்தகைமைகள்***

1. க.பொ.த.சா.தரம்– க.பொ.த சா.தரப் பரீட்சைகளில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் ஆறு(06) பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் .

2. க.பொ.த.உயர்தரம்–2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்கு தமிழ் மூலம் தோற்றி ஏதாவதொரு பாடநெறியில் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை) குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

***II. ஏனைய தகைமைகள்***

1. வயது–09.09.2010 ஆம் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
2. உயரம்–4அடி 10 அங்குலம்(146Cm)குறையாமலும் இருத்தல் வேண்டும்.
3. திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.
4. வடமாகாணத்தில் சேவையாற்றுவதற்கு விரும்புபவராகவும் ,நல்ல தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் மூன்றாண்டுகள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் பெயர்ப்பதிவேட்டில் இல்லாவிடின் அவரது பெற்றோர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் அப்பெயர்கள் தனது பெற்றோர்களின் பெயர்கள் என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்விண்ணப்பதாரர்கள் 09.09.2010 அன்று மு.ப.08.00 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையினுடன் இணைந்திருக்கும் யாழ்தாதியர் கல்லூரிக்கு பின்வரும் ஆவணங்களுடன் நேரடியாக சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. தாங்களாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் (விண்ணப்பப்படிவ மாதிரி இணைக்கப்பட்டுள்ளது)
2. ஆள் அடையாள அட்டை. 3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4. கல்வித் தகைமைகள் (மூலப்பிரதி, போட்டோப்பிரதி)

பின் குறிப்பு– ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 02.09.2010 திகதிக்குப் பதிலாக 09.09.2010 ஆம் திகதியில் தாதியர் கல்லூரிக்குச் சமூகம் கொடுக்கவும்.

**மாணவ ஆண்-பெண் தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளல்-2010**
**(தமிழ்மொழி மூலம் -வடமாகாணம்)**

1. (அ). முதலெழுத்துக்களுடன் இறுதிப்பெயர்(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)...........
   (ஆ). முழுப்பெயர்(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)...........
2. தபால் முகவரி(ஆங்கிலத்தில்).............
3. 1. நிரந்தர முகவரி(ஆங்கிலத்தில்)...........
   2. மாவட்டம் (ஆங்கிலத்தில்)............
4. பிறந்த திகதி....... ஆண்டு.......... மாதம்.......... திகதி.........

5. பால் — ஏற்புடைய சுவட்டில் சரி போடவும்.

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

6. நீர் இலங்கைப் பிரசையா? — ஏற்புடைய சுவட்டில் சரி போடவும்.

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

7. தேசிய அடையாள அட்டை இலக்கம்: .........................................................
8. உயரம்:– அடி................................ அங்குலம் ................................
9. கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (உ/த) பரீட்சையில் (தோற்றிய பாடங்கள் மற்றும்(புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பிரதியை இணைக்கவும்)

அ. ஆண்டு:................................ சுட்டிலக்கம்:............................

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

ஆ. க.பொ.த.(சாதாரண தரம்) பரீட்சை

முதலமர்வு:
1. பரீட்சை வருடமும் மாதமும்:
11. ஆண்டு:...............................
சுட்டிலக்கம்:...............................

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

இரண்டாம் அமர்வு:
1. பரீட்சை வருடமும் மாதமும்:
11. ஆண்டு:...............................
சுட்டிலக்கம்:...............................

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

10. நீதிமன்றமொன்றில் எப்போதாவது ஏதாவது குற்றம் தொடர்பில் குற்றம் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா?

ஆம் எனின் விபரம் தருக.

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

11. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கு எட்டிய வகையில் உண்மைகள் எனவும் சரியானவைகளெனவும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகிறேன்.

ஆ) என்னால் தரப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானவைகள் எனக் கண்டுபிடிக்கப்படின் சேவைகள் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு முன்பு தகுதியற்றவன் எனவும் நியமனத்தின் பின்பு அவ்வாறு கண்டுபிடிக்கப்படின் சேவையினின்றும் விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

இங்கு ரூபா 500க்கான முத்திரை ஒட்டி அதன்
மேல் கையொப்பம் இட்டு செல்லுபடி அற்றதாக்குக

................. ..........................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
இவ்விண்ப்பத்தை சமர்ப்பிக்கும்...................................................என்பவரை
நான் நன்றாக அறிவேன் என்றும் அவர்.........................ஆந் திகதி என் முன்னிலையில்
அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

...................................................................
உறுதிப்படுத்துவரின் கையொப்பம்
உறுதிப்படுத்துபவரின் உத்தியோகத்தரின் முழுப்பெயர் ...................................
பதவி:.................................
முகவரி:...........................................
திகதி:...........................................

(C-982)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம்

# இவ்வருட இறுதிக்குள் வடபகுதிக்கு முழுமையான மின்சார விநியோகம்

(கிளிநொச்சி)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் வடக்கில் உள்ள பிரதான நகரங்களுக்கும் 60 கிராமங்களுக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாக வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் மின்சார அபிவிருத்திக்குப் பொறுப்பான பணிப்பாளர் கிறேசன் முத்துக் கடுவராச்சி தெரிவித்துள்ளார்.

இதில் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பரந்தன் மற்றும் துணுக்காய் ஆகிய பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 300 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் மேலும் 300 கிராமங் களுக்கு இவ்வருட இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படும் என்றும் இதன் மூலம் வடக்கிற்கான மின்சார விநியோகம் முழுமையான அளவில் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் வடமாகாண தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் 30 வருடங்களின் பின்னரே இணைக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகளின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமான முறையில் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது எனவும் அவர்களிடம் இருந்து இன்னும் 6 மாதங்களுக்கு மின்சாரக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார்.

இவ் வேலைத்திட்டம் அமைச்சர்களான பசில் ராஜபக்ச மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் அமுல்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-7)

## வடமராட்சி கிழக்கில்

# மீள்குடியேற்றுவதற்காக முதற்கட்டமாக 78 குடும்பங்கள் அழைத்து செல்லப்பட்டனர்

(அல்வாய்)

குடத்தனை நலன்புரி முகாம்களிலிருந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்களில் 78 குடும்பங்கள் நேற்று வடமராட்சி கிழக்கிற்கு முதற்கட்டமாக மீளக் குடியமர்த்துவதற்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டு அதன் பின்னர் தத்தம் கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இதில் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்ட காலப்பகுதியில் அம் மக்களுக்கு சமைத்த உணவு, குடிநீர் வசதி என்பன பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும் இம்மக்கள் மாமுனை, செம்பி யன்பற்றுவடக்கு, செம்பியன் பற்று, மருதங்கேணி தாளையடி உடுத்துறை, அக்கராயன், கட்டைக் காடு, கற்றிக்காடு, வெற்றிலைக் கேணி கேவில், சுண்டிக்குளம் ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்கள் மருதங்கேணி உதவி அர சாங்க அதிபர் எஸ்.ஸ்ரீஸ்கந் தகுமார் தலை மையில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது;

மேலும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் படைத்தரப் பினருடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இம் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி கிராம சேவையாளர் அறிவித் துள்ளார். (ஸ்ரீ-4-19)

# இன்றைய காலநிலை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இன்று காலநிலையானது மப்பும் மந்தாரமுமாக காணப்படும். சிலவேளைகளில் நாட்டின் பல பாகங்களிலும் இலேசான மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளது.

இதேவேளை காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 20 தொடக்கம் 40 கிலோமீற்றர் என்ற அளவில் வீசக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சில வேளைகளில் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் எனவும் இன்றைய ஆகக்கூடிய வெப்பநிலையானது 31 பாகை செல்சியஸ் அளவில் இருக்கும் என திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)


# கிருஷ்ண ஜெயந்தியும் உறியடி உற்சவமும்


(யாழ்ப்பாணம்)



கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேஸ்வதான கிருஷ்ணஜெயந்தி உற்சவம் நாளை புதன்கிழமை இரவு 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு உறியடி உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-4)





நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் செல்வி தனசொரூபி நவரட்ணத்தின் பண்ணிசைக் கச்சேரி இடம்பெறுவதையும் மேடையில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் பீடாதிபதி சர்வரூபானந்தா, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.ச.சரவணபவ, சைவ சமய விவகாரக் குழுவின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும்,

நல்லைக்குமரன் மலரினை நூலின் கௌரவ பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியிட்டு வைக்க, அதன் முதற்பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதிநிதி பெற்றுக் கொள்வதையும்,

யாழ்.மாநகர சபை ஆணையாளர் மற்றும் முதல்வர் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் பேராசிரியர் ச.சத்தியசீலன் ஆய்வுரை நிகழ்த்துவதையும் சிவத்தமிழ் பேரரசி கலாநிதி (அமரர்) தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கான யாழ்.விருதினை யாழ்.மாநகர சபை முதல்வரிடமிருந்து தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# துப்பாக்கி சூட்டுச் சத்தம் கேட்டபோது சுட வேண்டாம் என எம்.பி. கத்தினார்

## மகேஸ்வரன் எம்.பி. கொலை வழக்கில் சாட்சி

(கொழும்பு)

ஆலய வாசலில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அப்போது சுட வேண்டாம் சுட வேண்டாம் என்று மகேஸ்வரன் எம்.பி. கத்தும் சத்தம் கேட்டது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தினையடுத்து ஆலயத்தினுள் இருந்த மக்கள் வெளியே ஓடினர். ஆலயத்தை விட்டு வெளியே வந்த நான் உள்ளே ஓடிச் சென்று பார்த்தபோது இரத்தம் தோய்ந்த நிலையில் ஆலய வாசலில் மகேஸ்வரன் எம்.பி. விழுந்து கிடந்தார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் படுகொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த சோதிலிங்கம் என்பவர் தெரிவித்தார்.

மகேஸ்வரன் எம்.பி. படுகொலை வழக்கில் நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. இதன்போது மூன்று சாட்சிகள் சாட்சியமளித்தன.

சாட்சிகளை அரச சட்டவாதி குமாரரட்ணம் நெறிப்படுத்தினார். வழக்கின் எதிரியான ஜோன்ஸ்ரன் கொலின் வெலண்டைன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.ஜெயக்குமார் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார்.

இதன்போது சாட்சியமளித்த சோதிலிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரன் ஆலயத்திற்குக் காலை 6 மணியளவில் நான் சென்றேன்.

அங்கு இரண்டு மூன்று மணித்தியாலங்கள் வரை நான் நின்றிருப்பேன். ஆலயத்திற்குள் மகேஸ்வரன் எம்.பி. நின்றிருந்தார். அவரது கடைசி மகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடனேயே அங்கு வந்திருந்தார்.

சிறுவயதிலிருந்தே அவரை நான் நன்கு அறிவேன். எமது ஊரைச் சேர்ந்தவரே அவர் ஆவார். ஆலயத்திற்கு அவர் வந்தால் சுற்றிக் கும்பிடுவது வழக்கமாகும். அதன்படி அன்றைய தினமும் ஆலயத்தைச் சுற்றி வந்தார்.

ஆலயத்தைச் சுற்றி அவர் வந்தபோது நான் அவருக்கு முன்பாக வந்து வெளி வாசலையடைந்தேன். அப்போது அவர் என்னிலிருந்து 20 அடி தூரத்தில் நின்றிருந்தார்.

நான் பிரதான வாசலால் வெளியே வந்தபோது துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. சுட வேண்டாம் சுட வேண்டாம் என மகேஸ்வரன் எம்.பி. கத்தியது எனக்குக் கேட்டது.

ஆனால் அவர் யாருடையதாவது பெயரைச் சொல்லிக் கத்தினாரா என்பது எனக்கு தற்போது ஞாபகமில்லை.

### எதிரியின் சேட்டை அடையாளம் காட்டிய சாட்சி

வழக்கு ஆரம்பிக்கப்பட்டபோது முதலாவது சாட்சியாக மகேஸ்வரன் எம்.பியின் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய சார்ஜன்ட் தர்மசிறி பெரேரா சாட்சியமளித்தார்.

இதன்போது வழக்கின் தடயப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எதிரியான ஜோன்ஸ்ரன் கொலின் வெலண்டயன் சம்பவ தினம் அணிந்திருந்ததாகத் தெரிவிக்கப்படும் சேட் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது.

இது எதிரி சம்பவ தினம் அணிந்திருந்த சேட்தான் என்று சார்ஜன்ட் தர்மசிறி பெரேரா அடையாளம் காட்டினார். இதேபோல் எதிரி மீது தனது ரிவோல்வரால் சுட்டதாகவும் இதனால் எதிரி காயமடைந்ததாகவும் தெரிவித்த தர்மசிறி பெரேரா தடயப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்ட தனது ரிவோல்வரையும் அடையாளம் காட்டினார்.

இங்கு சாட்சியமளித்த அவர் நான் கடமையின்போது ரிவோல்வரைப் பாவித்து வந்தேன். அதில் ஒரு தடவையில் ஆறு ரவைகளைப் போட்டுச் சுட முடியும்.

சம்பவ தினம் நான் 15 தடவைகள் வரை எனது துப்பாக்கியால் சுட்டிருப்பேன். எனது ரிவோல்வரினால் சுட்ட குண்டின் காரணமாகவே எதிரி காயமடைந்தார் எனத் தெரிவித்தார்.

இந்தச் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்த எதிரி தரப்புச் சட்டத்தரணி எஸ்.ஜெயக்குமார், கடந்த தவணை தான் சாட்சியமளித்தபோது உங்களது துப்பாக்கிக் குண்டுபட்டு எதிரி காயமடைந்தாரா என்பது குறித்துத் தெரியாது என தெரிவித்துள்ளீர்கள்.

தற்போது உங்கள் ரிவோல்வர் குண்டினாலேயே எதிரி காயமடைந்ததாகப் பொய்ச் சாட்சியம் கூறுகின்றீர்கள் எனத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த சாட்சி,

இல்லை எனது ரிவோல்வர் குண்டினாலேயே எதிரி காயமடைந்தார் எனத் தெரிவித்தார். எதிரி எந்த ஆயுதத்தினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்பதனை நான் காணவில்லை.

ஆனால் எனது துப்பாக்கிச் சூட்டில் அவர் கையில் காயமடைந்திருந்ததை நான் கண்டேன் என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது கொட்டாஞ்சேனை சங்கமித்தை மாவத்தையிலுள்ள கடை ஊழியர் ஒருவரும் சாட்சியமளித்தார். இந்தச் சாட்சிகளையடுத்து வழக்கை விசாரணையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது சாட்சிகளாக தியாகராஜா பரமேஸ்வரன், தியாகராஜா துவாரகேஸ்வரன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (ச–5)

# திருவெண்காட்டில் சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை காலை 7 மணி முதல் இடம்பெறும்.

சங்காபிஷேகக் கிரியைகளை ஆலயகுரு ஈசான சிவாச்சாரியார் விஸ்வதமூர்த்திக் குருக்கள் நடத்திவைப்பார். (ந)

# நிருபமா ராவ்...

இதேவேளை இலங்கைக்கு வந்த அவர் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தங்கியிருப்பதுடன் வடக்கில் மீள்குடியேற்றப்பணிகளை பார்வையிடுவதற்காக அந்தப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்வது இது இரண்டாவது முறையாகும். (ச-5)

# ஐ.தே.கவின் நிலைப்...

குழுக்களை அமைப்பது தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளன்.

இதில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீடிப்பது தொடர்பில் தமது கட்சிக்கு உடன்பாடு இல்லையென அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய சீர்திருத்தம் தொடர்பில் தற்போது தமது கட்சியின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும் இது தொடர்பில் தமது கட்சியின் தீர்மானம் இன்று வெளியிடப்படும் என்றும் திஸ்ஸஅத்தநாயக்க குறிப்பிட்டார். (ச-5)

# ஆதரவு அளிப்பது குறித்...

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் ஐந்து இடதுசாரி கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். ஒரு பிரதி அமைச்சரும் அடங்குகின்றன.

நாடாளுமன்றத்தில் இந்த யோசனைத் திட்டம் சமர்பிக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிப்பதா அல்லது.

அவையை விட்டு வெளியேறுவதா என்பது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஆதரிக்கும் வகையிலான யோசனைத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதில்லை என இடதுசாரி கட்சிகள் முன்னர் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்களான டி.யூ.குணசேகர, பேராசிரியர் திஸவித்தாரன, பிரதி அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவநாணயக்கார, வை.ஜி.பத்மசிறி ஆகியோர் இடதுசாரி கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. (ச-5)

# பொன்னகருக்குள் நுழை...

அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட காவலாளிகள் படைத்தரப்புக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மக்கள் காணியிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள்.

தமது சொந்தக்காணிகளில் தம்மைக் குடியிருத்துமாறு அரச அதிகாரிகளிடம் பல முறை கோரிக்கை வைத்த பொழுதும் தமது அவலம் குறித்து யாரும் நடவடிக்... வில்லை என தெரிவித்த மக்கள் ... தக்காணிகளில் தம்மை குடியம... வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ... சந்திர சிறியிடமும் மனுக் கைய... தெரிவித்தார்கள்.

மழை ஆரம்பித்துள்ள தருண... ரங்களில் வாழ முடியாத நிலை... படுவதாகவும் கூடாரங்களுக்குள் ... முதலிய விசஜந்துக்கள் வருவதால் ... களை வைத்திருக்க முடியாத நி... டுள்ளதாக குறிப்பிட்டார்கள்.

குறிப்பிட்ட மக்கள் தனது கா... தமக்கு புலம் பெயர்ந்த உறவு ஒரு... கட்டித்தரப்பட்ட நிரந்தர சீமெண்ட் வீடு... யற்ற நிலையில் உள்ளது. அதன் ... பாலைப் போட்டு இருக்கப் போகி... தெரிவித்தார்கள்.

இன்றைய தினம் கிளிநொச்... அரச அதிபருக்கு மீண்டும் தமது இ... குடியமர்த்தும் படி கோரிக்கை வை... தாக அவர்கள் தெரிவித்தார்கள். த... களை அபகரிக்கும் நடவடிக்கைக... தாம் சொந்த இடத்தில் குடியேற ந... எடுக்க வேண்டும் என அனைவரிட... கை விடுத்துள்ளனர். இந்தக் காணி... வாக்கிய நிலையில் உள்ளன என்ப... டத்தக்கது.

# வடமாகாண...

இந்நிலையில் இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரலுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவிருந்த நிலையில் வடக்குமாகாண ஆளுநரின் விசேட பணிப்பில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் ப.விக்னேஸ்வரன் நாளை முதலாம் திகதி முதல் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளராக நியமனம் பெறுவதாக வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு நியமனக் கடிதம் அனுப்பியிருந்தது.

எனினும் பின்னர் அறிவிக்கப்பட்டதற்கமைய, வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் திருத்தம் மேற்கொண்டு மீண்டும் இன்று வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இந்திய இரா...

இராணுவத் தளபதி இந்தியா செல்லவுள்ளார். கருத்தரங்கில் பேசுவதற்காக அவர் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அரசியல் அமைப்பு திருத்தத்...

அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பான அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

17 ஆவது அரசியலமைப்பு சீர் திருத்தம் மற்றும் உள்ளூராட்சி சபைத்திருத்தம் என்பன நேற்று நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### உள்ளூராட்சி சீர்திருத்தம்

உள்ளூராட்சி சபைகளுக்கான சீர்திருத்தத்தை அமைச்சர் ஏ.எல்.எம்.அத்தாவுல்லா அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இதன்படி உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் தொகுதிமுறை மற்றும் விகிதாசார முறையின் கீழ் இடம்பெறவுள்ளன.

இதில் விகிதாசார முறைக்கு மூன்றில் இரண்டு பங்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர உள்ளூராட்சி சபை வரவு செலவுத்திட்டம் தோல்வியடையும் போது இதுவரை காலமும் தவிசாளருக்கு இருந்த அதிகாரம் புதிய முறையின் கீழ் குறைக்கப்பட்டுள்ளது.

அதாவது தவிசாளர் தமது வாக்கை செலுத்தும் முறை அகற்றப்பட்டுள்ளது. எனவே புதிய முறைப்படி வரவுசெலவுத்திட்ட தோல்வியடையுமாயின் உள்ளூராட்சி சபைத்தலைவர் பதவி விலக வேண்டும்.

### அரசியல் அமைப்புத் திருத்தம்

இதனைத் தவிர 17 ஆவது அரசியல் அமைப்பின் சீர்திருத்தம் அமைச்சர் ஜி.எல்.பீரிசினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் கீழ் 7 சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்ந்தும் அமைக்கப்படும்.

பொலிஸ், தேர்தல், அரச சேவை, கை யூட்டலுக்கு எதிரான ஆணைக்குழு, நீதி சேவை ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக் குழு உட்பட்ட வகையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்காக நாடாளுமன்றத்தினால் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்படும் இதில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் பிரதமரால் பிரேரிக்கப்படும் ஒருவர், எதிர்க்கட்சினால் பிரேரிக்கப்படும் ஒருவர் என ஐவர் இடம் பெறுவர்.

பிரதம மந்திரி மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் சிறுபான்மை சமூகங்களை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக இருப்பார்கள்.

எனவே இந்தநாடாளுமன்றக்குழு அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கியிருக்கும் இதனை ஜனாதிபதி அங்கீகரிக்கப்பட வேண்டும். அமைக்கப்படும் சுயாதீன ஆணைக் குழுக்களின் அதிகாரங்கள் அவற்றின் தலைவர்களுக்கு வழங்கப்படும். இதனை நாடாளுமன்றம் மேற்கொள்ளும்.

பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அப்பால் பொலிஸ் மா அதிபருக்கு இட மாற்றம் உட்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவசர நிலைமையை கருத்தில் கொண்டு இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி பதவி தவணைக்காலம்

இதனைத் தவிர ஜனாதிபதியின் பதவி தவணைக்காலங்கள் இரண்டு முறையாக இருந்தமை கட்டுப்பாடின்றி தொடருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றத்திற்கு பதில் கூறக் கூடியவராக இருப்பார். அவர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நாடாளுமன்றத்துக்கு சமுகமளித்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியிருக்கும்.

அத்துடன் ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப் பிரசாதங்கள் கிடைக்கும். இந்த நிலையில் குறித்த சீர் திருத்தங்கள் உடனடியாக உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டு நீதி ஆலோசனைகள் பெறப் படவுள்ளன.

இதேவேளை அரசியல் அமை... தம் அமைச்சரவையின் ஒப்புதலை... நிலையில் உயர் நீதிமன்றத்தின்... சனைக்காக அதனிடம் சமர்ப்பிக்... ளது. பின்னர் உயர் நீதி மன்றத்தின்... உடன் அது நாடாளுமன்றத்தில் சம... படும் என்றும் அத்தகவல்கள் தெ... றன.

அரசியலமைப்பைத் திருத்து... முதற்கட்ட யோசனைகளை ஆளு... மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அ... எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளும... சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசாங்க... கள் தெரிவிக்கின்றன.

### 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்ப...

7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ... கப்படும் திருத்தங்கள் தொடர்ந்து இ... கள் விவாதத்துக்குள்ளாக்கப்பட்டு 9... வாக்கெடுப்புக்கு விடப்படும் இதன் கா... அக்காலப்பகுதியில் ஆளும்கட்சி அ... கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பி... எவரும் நாட்டைவிட்டு வெளியே ... கூடாதென்று குறித்த தினங்களில் ... கட்டாயமாக நாடாளுமன்றத்துக்கு வ... டும் என்றும் ஆளும் கட்சி தமது உறு... களை அறிவுறுத்தியுள்ளதாகவும் ... வல் தெரிவிக்கின்றது.

PCST 1
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
DCP UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
47250/=

PCST PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT)LTD
நம்ப முடியாத விலைகள்!!!
என்றும் எதிர்பாராத அதிரடி விலைக் கழிவு
(10 நாட்கள் மட்டுமே)

PCST 3
Intel Dual Core 2.8Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
DCP UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
47800/=

PCST 2
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
50750/=

PCST 5
Intel Core 2 Dou 2.93Ghz
Intel G41 Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
59000/=

PCST 4
Intel Dual Core 2.8Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
DCP UPS,Keyboard
Mouse, Speaker
3 Years Warranty
51250/=

Dialog
எல்லையற்ற இணையம்
மாதாந்தம் 690/= மட்டுமே!
3.5 Mbps High Speed
Broadband Available

| | |
|---|---|
| Dongle 7.2mMbps | -6300/= |
| Web cam | -1100/= |
| UPS DCP | -4300/= |
| UPS Prolink | -4500/= |
| Keyboard | -600/= |
| Mouse | -400/= |
| Headphone | -850/= |
| Router Single Port D.Link | -5000/= |
| Prolink Net Book | -44000/= |
| Printer HP 1102 Laserjet | -15800/= |
| Printer HP Inkjet 1660 | -4750/= |
| Printer Epson Inkjet T10 | -4900/= |

PROLINK Atom Netbook
விசேட விலைக்கழி...
44000/= மட்டுமே!

M.M.V Road,Nelliady.
T.P: 021 226 4999
305, Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 222 1101,021 222 9644
E.Mail: pcsjaffna@sltnet.lk
No:5,Kanakapuram Road,Kilinochc...
T.P: 021 228 5360

இப்பத்திரிகை வலம்புரி அச் சேவைத்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்...